# இலக்கு

வாராந்த மின்னிதழ்

இதழ் : 40 • 25.08.2019

அனைத்துலக தமிழ் ஊடக மையம்

GLOBAL TAMIL MEDIA CENTRE, USA • ilakku2009@gmail.com




## ஆகஸ்ட் 30

# சர்வதேச காணாமல் ஆக்கப்பட்டோர் தினம்

## சிறப்பிதழ்

- சர்வதேச குற்றவியல் நீதிமன்றமே ஒரே தீர்வு.
- அச்சுறுத்தல்களுக்கு அடிபணியப் போவதில்லை.
- எமது உறவுகளை மீட்கும்வரை போராட்டத்தை கைவிடப்போவதில்லை.
- உலகத் தமிழர்கள் அனைவரும் எம்முடன் இணைந்து போராட வேண்டும்.

**வடக்கு கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தின் தலைவிகள் இலக்கு மின்னிதழுக்கு சிறப்பு பேட்டி..**

# சர்வதேச சமூகத்தை அவமதிக்கும் இராணுவத் தளபதியின் நியமனம் ஐநா.கூட்டமைப்பின் செயற்பாடுகளே காரணம்

## வன்மையாக கண்டிக்கிறது தமிழ்த் தேசிய அரசியல் அவதானிப்பு மையம்



முள்ளிவாய்க்கால் படுகொலை

"போர்க் குற்றங்கள், மனித உரிமை மீறல்கள் தொடர்பாக பொறுப்புக்கூற நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஜெனீவாவில் உறுதி அளித்திருந்திருந்த சிறிலங்கா அரசாங்கம், அதற்கான எந்த நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை. பதிலாக போர்க் குற்றம்சாட்டப்படும் ஒருவரை துணிச்சலுடன், இராணுவத் தளபதியாக நியமித்திருப்பதன் மூலம், சர்வதேச சமூகத்தை அவமானப்படுத்தியிருக்கின்றது" என சர்வதேச தமிழ்த் தேசிய அரசியல் அவதானிப்பு மையம் குற்றஞ் சாட்டியிருக்கின்றது. "பொறுப்புக் கூறல் விடயத்தில் தான் எதனையும் செய்யப்போவதில்லை என்பதை சிறிலங்கா அரசாங்கம் பகிரங்கமாகச் சொல்லிக்கொண்டிருந்த போதிலும், கடந்த நான்கரை ஆண்டுகளில் சிறீலங்கா மீது சர்வதேச அழுத்தங்களும் கொடுக்கப்படவில்லை. அத்துடன் பிரதான தமிழ் அரசியல் கட்சியான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் அரசாங்கத்தைப் பாதுகாக்கும் வகையிலேயே செயற்பட்டது. இந்த இரண்டும்தான் போர்க் குற்றவாளி என ஐ.நா.வினால் அடையாளம் காணப்பட்ட ஒருவரை இராணுவத் தளபதியாக சனாதிபதி மைத்திரிபால சிறிசேன துணிச்சலுடன் நியமிப்பதற்குக் காரணம்" எனவும் அவதானிப்பு மையம் சுட்டிக்காட்டியிருக்கின்றது.

கடுமையான போர்க் குற்றச்சாட்டுக்குக்களுக்கு உள்ளாகியிருக்கும் சிறிலங்கா இராணுவத்தின் 58 ஆவது படை அணியின் தளபதியாக இருந்த சவேந்திர சில்வாவை கடுமையான சர்ச்சைகளுக்கு மத்தியிலும், இராணுவத் தளபதியாக நியமித்திருப்பது குறித்து வெளியிட்டிருக்கும் அறிக்கையிலேயே தமிழ்த் தேசிய அரசியல் அவதானிப்பு மையம் இதனைக் குறிப் பிட்டிருக்கின்றது. இது குறித்து அவதானிப்பு மையம் மேலும் தெரிவித்திருப்பதாவது: "இறுதிக் கட்டப் போரில், மன்னாரில் தொடங்கி, முள்ளிவாய்க்கால் வரை பெருமளவு போர்க் குற்றங்களுக்குக் காரணமாக இருந்த 58 ஆவது டிவிசனை வழிநடத்தியவர் அவர். இந்தப் போரின்போது தான், சர்வதேச மனித உரிமைச் சட்டங்களையும், சர்வதேச மனிதாபிமானச் சட்டங்களையும் மீறினார் என்று தொடர்ச்சி 4இல்...



# நீதிக்கோரிக்கைக்கான பயணத்தில் பேதமின்றி அணிதிரளுங்கள்

## யாழ், கிழக்கு பல்கலைக்கழக மாணவர் ஒன்றியங்கள் கூட்டாகக் அறைகூவல்

தமிழர் தாயகத்தின் இருவேறு இடங்களில் எதிர்வரும் 30ஆம் திகதி வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் உறவினர்களால் முன்னெடுக்கப்படவுள்ள பாரிய கவனயீர்ப்பு போராட்டத்திற்கு முழுமையான ஆதரவினை வழங்கவுள்ளதாக யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியமும், கிழக்கு பல்கலைக்கழக மாணவர் கலைப்பீட மாணவர் ஒன்றியமும் அறிவித்துள்ளன.

அத்துடன் வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் உறவினர்களின் நீதிக்கான போராட்டத்திற்கு பல்கலைக்கழக மாணவர்கள் முழுமையாக பங்கேற்கவுள்ளதைப்போன்ற ஏனைய அனைத்து தரப்பினரும் பேதங்களை மறந்து அணிதிரளுமாறும் அறைகூவல் விடுத்துள்ளன. எதிர்வரும் 30ஆம் திகதி சர்வதேச காணாமலாக்கப்பட்ட தினம் தாயகத்தில் உணர்வெழிச்சியுடன் நினைவு கூரப்படவுள்ளது. இதன்போது, வடக்கிலும் கிழக்கிலும் இறுதிப்போரின்போது படைகளிடத்தில் சரணடைந்தும், ஒப்படைத்தும், காணாமலாக்கப்பட்டவர்கள், மற்றும் அசாதாரண சூழலில் பல்வேறு தருணங்களில் காணாமலாக்கப்பட்டவர்கள் என அனைவருக்கும் என்ன நடந்தது என்பதற்கான பதிலை சிறீலங்கா அரசாங்கம் கூறவேண்டும். இதிலிருந்து விலகி நிற்கவே முடியாது.

பொறுப்புக்கூறலிலிருந்து தான் தப்பித்துக்கொள்வதற்காக சிங்களப்பேரினவாத சிறிலங்கா அரசு தொடர்ந்தும் தனது ஏமாற்று வித்தைகளை முன்னெடுத்து வருகின்ற நிலையில் சர்வதேசம் உடனடியாக இவ்விடயத்தில் தலையீடு செய்து காணாமலாக்கப்பட்ட சம்பவங்களுடன் தொடர்புடையவர்களை விரைந்து சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் நிறுத்துவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் என்று வலியுறுத்துவதற்கு வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் உறவினர்கள் தீர்மானித்துள்ளனர். இதற்காக, தாயகத்தில் வட புலத்தில் வவுனியா பன்றிக்கெய்தகுளத்தில் இருந்து உறவுகளை படையினரிடத்தில் கையளித்த ஓமந்தை சோதனைச்சாவடி இருந்த இடம்வரையும் பேரணியாக செல்லவுள்ளனர். அதேபோன்று கிழக்கில் கல்முனையில் தரவைப்பிள்ளார் ஆலயத்திலிருந்து போராட்ட பேரணியை ஆரம்பித்து கல்முனை வடக்கு தமிழ்ப்பிரிவு பிரதேச செயலாளர் செயலகம் வரையில் செல்லவுள்ளனர்.

இந்நிலையில்,யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் வவுனியாவில் நடைபெறும் போராட்டத்தில் பங்கேற்று தமது ஒத்துழைப்பினை



வழங்கவுள்ளதோடு கிழக்கு பல்கலைக்கழக மாணவர்கள் கல்முனை போராட்டத்தில் பங்கேற்கவுள்ளனர். இதுகுறித்த உத்தியோகப்பூர்வ அறிவிப்பினை அடுத்துவரும் சில தினங்களில் வெளியிடவுள்ளதாகவும் இரு மாணவர் ஒன்றியங்களும் அறிவித்துள்ளன.

மேலும் நீதிகோரும் சமூகத்தின் நியாயங்களை புரிந்து அனைவரும் பாகுபாடின்றியும் இடையூறுகளை ஏற்படுத்தாதும் ஒன்றிணைந்து சர்வதேசத்தின் கவனத்தினை ஈர்த்து காணாமலாக்கப்பட்டோருக்கான விடயத்தில் உரிய தீர்வுக்காக முன்னகர்த்தலை இத்தருணத்தில் முன்னெடுக்க வேண்டியது காலத்தின் கட்டாயமாகவுள்ளதாகவும் அம்மாணவர் ஒன்றியங்கள் சுட்டிக் காட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சனாதிபதி தேர்தலின் எதிரொலி இந்தியா பயணமாகிறது கூட்டமைப்பு

இந்திய அரசாங்கத்துடன் கலந்துரையாடல்களை நடத்துவதற்காக, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரதிநிதிகள் குழு அடுத்து வரும் வாரங்களில் புதுடெல்லிக்குப் பயணமாகவுள்ளது. கொழும்பு ஆங்கில வாரஇதழ் ஒன்றுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் இந்த தகவலை வெளியிட்டுள்ளார். ”இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி சிறிலங்கா வந்திருந்தபோது, பல விடயங்கள் குறித்து அவருடன் பேசினோம். எங்களை புதுடெல்லிக்கு வரும்படி அவர் கேட்டிருந்தார்.

விரைவில் அந்த பயணத்தை மேற்கொள்வோம் என நம்புகிறோம். தேசிய பிரச்சினை தொடர்பாக சிறிலங்கா அரசாங்கம் அனைத்துலக சமூகத்துக்கு அளித்த உறுதிப்பாட்டை பேணுவதை உறுதி செய்வதில் இந்தியா இன்னும் தீவிரமான பங்கை வகிக்குமாறு, புதுடெல்லியிடம் வலியுறுத்துவோம். தேசிய பிரச்சினைக்கு சிறிலங்கா இன்னும் தீர்வை வழங்கவில்லை என்ற உண்மை குறித்து நாங்கள் புதுடெல்லியுடன் கலந்துரையாடுவோம். இந்த விடயம் தொடர்பான தீர்மானத்தை ஆதரித்த இந்தியாவுக்கும், ஏனைய நாடுகளுக்கும் — பேச்சுகளுக்கு உதவிய நாடுகளுக்கும் — சிறிலங்கா அரசாங்கத்தினால் பல உறுதி மொழிகள் வழங்கப்பட்டன.

ஆனால் இந்த உறுதிமொழிகள் எதுவும் நிறைவேற்றப்படவில்லை. இப்போதைய சூழலில், வாக்குறுதிகளை நிறைவேற்றுமாறு சிறிலங்கா அரசாங்கத்துக்கு அனைத்துலக சமூகம் உணர வைக்க வேண்டியது அவசியம்” என்றும் அவர் கூறினார். அடுத்து வரும் வாரங்களில் தமது பிரதிநிதிகள் குழுவை புதுடெல்லிக்கு அனுப்புவதற்கு கூட்டமைப்பு எதிர்பார்த்துள்ளது.

# படையினரின் வாக்குகளை இலக்கு வைத்தே சவேந்திர நியமிக்கப்பட்டார்

**அம்பலமானது மைத்திரியை வைத்து மகிந்த நகர்த்திய திட்டம்**



நடைபெறவுள்ள சனாதிபதி தேர்தலில் படையினரினதும் அவர்களது உறவினர்களினதும் முழுமையான ஆதரவினை கோத்தபாய ராஜபக்சவுக்கு பெற்றுக்கொள்ளும் முகமாகவே சவேந்திர சில்வா பல்வேறு எதிர்ப்புக்களுக்கு மத்தியில் நியமிக்கப்பட்டுள்ளார். எதிர்க்கட்சித்தலைவர் மகிந்த ராஜபக்ச சனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை வைத்து இந்த திட்டத்தினை முன்னகர்த்தியுள்ளமை தற்போது அம்பலமாகியுள்ளது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையின் செப்டம்பர் மாத அமர்வு ஜெனீவாவில் ஆரம்பமாகவுள்ளது. அத்துடன் பொதுச் சபை கூட்டத் தொடரும் நியூயோர்க்கில் நடைபெறுகின்றது. இவ்வாறான தருணத்தில் இறுதிப்போரின் போது 58வது பிரிவின் கட்டளைத் தளபதியாக இருந்த சவேந்திர சில்வா மீது பல்வேறு போர்க் குற்றச்சாட்டுக்கள் மற்றும் மனிதாபிமான சட்டமீறல்கள் தொடர்பில் சாட்சியங்களுடன் முறைப்பாடுகள் ஐ.நா மன்றிலும் சர்வதேச நாடுகளிலும் உள்ளன.

இவ்வாறான சூழலில் சவேந்திர சில்வாவை திடீரென இராணுவத் தளபதியாக மைத்திரிபால சிறிசேன நியமித்தமையால் ஐ.நா பொதுச் செயலாளர், மனித உரிமைகள் ஆணையாளர் முதல் அனைத்து உள்நாட்டு வெளிநாட்டுத்தரப்பினரும் போர்க்கொடி தூக்கியுள்ளனர். உண்மை—யிலேயே அடுத்துவரவுள்ள சனாதிபதி தேர்தலில் படையினர் மற்றும் அவர்களது குடும்பங்களின் வாக்குகளை முழுமையாக பெறுவதற்கு ராஜபக்ச தரப்பினர் கங்கணம் கட்டியுள்ளனர். அவ்வாறு வாக்குகளைப் பெற வேண்டுமாயின் சிங்கள, பௌத்த பேரினவாதத்தினை மேலும் மேலும் வலுவாக விதைக்க வேண்டும். அதற்கான ஒரு வழியாக சவேந்திர சில்வாவை இராணுவத்தளபதியாக நியமிக்கும் பட்சத்தில் உள்நாட்டிலும், சர்வதேசத்திலும் பலத்த எதிர்ப்புக்கள் தோன்றும். அவ்வாறு தோன்றுகின்றபோது போரை நிறைவு செய்த படையினரை பாதுகாப்பதற்கு எவருக்கும் அடிபணியாத முன்னாள் பாதுகாப்புச் செயலாளராலேயே முடியும் என்ற கருத்துருவாக்கம் மக்கள் மத்தியில் விதைக்கப்படும்.

அக்கருத்துருவாக்கம் நிச்சயமாக தேர்தலில் வாக்குகளாக பிரதிபலிக்கும். அப்பிரதிபலிப்பானது சிறுபான்மையினர் ஆதரவளிக்காது விட்டாலும் தென்னிலங்கையின் பெரும்பான்மையினரின் ஒட்டுமொத்த வாக்குகளும் ஒன்றிணைவதற்கே வழிவகுக்கும். அவ்வாறான நிலைமை தமக்கு சாதகமாக அமையும் என்பதே ராஜபக்சவின் கணக்காக உள்ளது. இந்த திட்டத்தினை சரியாக வகுத்த ராஜபக்ச கடந்த ஒக்டோபரில் அரசியல் புரட்சியின்போது தன்னிடம் மண்டியிட்ட மைத்திரிபால சிறிசேனவை வைத்து நகர்த்தியுள்ளார் என்பதே நிதர்சனமான உண்மையாகும். சவேந்திரவின் நியமனமானது சிங்கள பௌத்த பேரினவாத வாக்குகளை ஒருங்கிணைப்பதற்கான திட்டமிடப்பட்ட அரசியல் நிகழ்ச்சி நிரலாகும் என்பதும் வெளிப்படை உண்மையாகின்றது.

## கோத்தபாயவின் கடவுச்சீட்டு விசாரணை மீள சி.ஐ.டியிடம்!

பொதுஜன பெரமுனவின் சனாதிபதித் தேர்தல் வேட்பாளர் கோத்தபாய ராஜபக்சவின் கடவுச்சீட்டு சர்ச்சை தொடர்பான விசாரணைகள் மீண்டும் குற்றவிசாரணைப் பிரிவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. கோத்தபாய வெளிநாட்டுப் பிரஜையாக இருந்த நிலையில் இலங்கை கடவுச் சீட்டொன்றைப் பெற்றுக் கொண்டமை தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ளுமாறு காவல்துறை தலைமையகத்தில் முறைப்பாடு ஒன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது.

ஆரம்பத்தில் இந்த முறைப்பாடு தொடர்பான விசாரணைகள் குற்ற விசாரணைத் திணைக் களத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டிருந்த நிலையில் பின்னர் கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவினரிடம் விசாரணைகள் கைமாற்றப்பட்டன.

கொழும்புக் குற்றத் தடுப்புப் பிரிவினர் ஆரம்ப கட்டவிசாரணைகளை நிறைவு செய்து அறிக்கை சமர்ப்பித்திருந்த நிலையில் விசாரணைகள் மீண்டும் குற்ற விசாரணைத் திணைக்களத்தின் வசம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இது தொடர்பான உத்தரவை பதில் காவல்துறை மாஅதிபர் நேரடியாக வழங்கியுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

# யாழ்ப்பாண செயலகம் உலகத்தை ஏமாற்றவா?

சிறீலங்கா அரசினால் அமைக்கப்பட்ட காணாமல் ஆக்கப்பட்டோர் செயலகத்தின் பிராந்திய அலுவலகம் சனிக்கிழமை யாழ்ப்பாணத்தில் இரகசியமாகத் திறந்துவைக்கப்பட்டிருக்கின்றது. காலை 10.30 க்கு திறப்பு விழா நடைபெறும் என அறிவிக்கப்பட்டிருந்த போதிலும், அதிகாலை 6.00 மணிக்கே அவசரமாகத் திறக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. கடுமையான எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டிருந்தமைதான் அதற்குக் காரணம். பாதிக்கப்பட்ட மக்கள் எதிர்ப்பை வெளியிட்டிருக்கின்றார்கள். செயலகம் கொழும்பில் திறக்கப்பட்டபோது, பாதிக்கப்பட்ட மக்கள் எதிர்பார்ப்பைக் கொண்டிருந்தார்கள். இதன் மூலம், காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைக்கும் என என நம்பினார்கள். இப்போது அந்த நம்பிக்கை தகர்ந்து போயுள்ளது.

செயலகத்தை அமைப்பதில் அரசாங்கம் காட்டிய அலட்சியம், காலதாமதம் என்பனவும், அதிகாரங்கள் அற்ற ஒன்றாக அது அமைக்கப்பட்டதும் அந்த நம்பிக்கையைத் தகர்த்தது. இது சர்வதேசத்தை சமாளிப்பதற்காக உருவாக்கப்பட்டது என்பதை அதன் செயற்பாடுகள் உணர்த்தியிருக்கின்றன. பாதிக்கப்பட்ட மக்கள் இதற்கு எதிராகக் கொதித்தெழுந்திருப்பதற்கு காரணம் அதுதான்.

போர் முடிவுக்கு வந்த பின்னர் நியமிக்கப்பட்ட கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்கத்துக்கான ஆணைக்குழு, மக்ஸவெல் பரணகம தலைமையிலான சனாதிபதி ஆணைக்குழு என்பன இது குறித்த விசாரணைகளை முன்னெடுத்து பரிந்துரைகளை வழங்கியிருந்தது. அவை அனைத்தும் கிடப்பில் போடப்பட்ட நிலையில்தான் காணாமல் ஆக்கப்பட்டோர் செயலகம் அமைக்கப்பட்டது.

காணாமல் ஆக்கப்பட்டோர் சர்வதேச தினம் எதிர்வரும் 30 ஆம் திகதி வருகின்றது. ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 42 ஆவது தொடர் செப்டம்பர் 9 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது. இதில் இரு விடயங்கள் கேள்விக்குள்ளாக்கப்படும். பொறுப்புக் கூறல் விடயத்தில் எவ்வாறான முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது என்பது ஒன்று. காணாமல் ஆக்கப்பட்டோர் விடயத்தில், குற்றஞ்சாட்டப்படும் சவேந்திர சில்வா இராணுவத் தளபதியாக நியமிக்கப்பட்டிருப்பது மற்றது. இவை சிறீலங்காவுக்கு நெருக்கடியைக் கொடுக்கும். இவற்றைச் சமாளிப்பதற்கான உபாயங்களில் ஒன்றுதான் யாழ்ப்பாணத்தில் பிராந்திய செயலகத் திறப்பு. காணாமல் ஆக்கப்பட்டோர் செயலகம் தெளிவான எந்த இலக்குகளோ, கால அட்டவணையோ அல்லது காணாமல் ஆக்கப்பட்ட மக்களின் உறவினர்களின் துயரங்களைப் போக்கும் எந்தப் பொறி முறைகளுமோ இன்றியே அது செயற்படுகிறது தெரிகின்றது. காணாமல் ஆக்கப்பட்டோர் விடயத்தில் நேரடியாகத் தொடர்புபட்டவர் எனக் குற்றஞ்சாட்டப்படும் சவேந்திர சில்வா இராணுவத் தளபதியாக நியமிக்கப்பட்டுள்ள பின்னணியில், பிராந்திய செயலகம் அர்த்தமுள்ள ஒன்றாக இருக்க முடியாது.

செயலகம், இடைக்கால அறிக்கையை கடந்த செப்டம்பரில் சனாதிபதி, பிரமர் ஆகியோரிடம் கையளித்தது. "காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரத்தில் குற்றஞ் சாட்டப்படும் அதிகாரிகளை இடைநிறுத்தி, விசாரணைகளை முன்னெடுக்க வேண்டும்" என்பது பரிந்துரையில் பிரதானமானது. இதற்குப் பின்னரும் சவேந்திர சில்வாவை இராணுவத் தளபதியாக நியமித்து, செயலகத்தின் பரிந்துரைகளைக் கணக்கில் எடுப்பதற்கு தயாராகவில்லை என்பதை மைத்திரி உணர்த்தியிருக்கின்றார். செயலகம் பயனுறுதியுள்ளதாக இருக்க முடியாது என்பதற்கு இதுவே ஆதாரம்.

நிலைமாறு கால நீதிப் பொறிமுறையில் பொறுப்புக் கூறலும், மீள நிகழாமையை உறுதிப்படுத்துவதும் முக்கியமானவை. பொறுப்புக் கூறலைச் செயற்படுத்த தயாராகவில்லை என்பதை அரசு வெளிப்படையாகவே சொல்கிறது. குற்றங்களில் சம்பந்தப்பட்டவர்கள் மீது விசாரணைகளை முன்னெடுப்பதற்கோ அல்லது, நடவடிக்கை எடுப்பதற்கோ அரசாங்கம் தயாராகவில்லை என்பதும் தளபதி நியமனத்தின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டிருக்கின்றது. இதனைவிட, முன்வைக்கக்கூடிய பரிந்துரைகளைக் கணக்கில் எடுப்பதற்குக் கூட அரசு தயாராகவில்லை. இந்த நிலையில், யாழ். செயலகம் அமைக்கப்படுவது உலகத்தை ஏமாற்றுவதற்கான நாடகமாக மட்டுமே இருக்க முடியும். காணாமல் ஆக்கப்பட்டோர் செயலகம், பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதியைப் பெற்றுத்தரக்கூடிய ஒன்றல்ல என்பது இவற்றின் மூலம் உணர்த்தப்பட்டுவிட்டது. ஆக, இது சர்வதேசத்தை ஏமாற்றும் திட்டங்களில் ஒன்று. இது குறித்து சர்வதேசத்தின் கவனத்தை ஈர்ப்பதும், அதன் தலையீட்டை வலியுறுத்துவதும் முக்கியம். எதிர்வரும் 30 ஆம் திகதி நடைபெறுபெறும் காணாமல் போனோர் சர்வதேச தின நிகழ்வுகளில் அணிதிரண்டு தமிழ் மக்கள் தமது ஒன்று திரண்ட உணர்வுகளை உலகத்துக்கு வெளிப்படுத்த வேண்டும்.

# அடங்க மறுக்கும் சஜித் - அங்குசத்தை கையிலெடுக்கும் ரணில்

நல்லாட்சி அரசின் நான்காம் ஆண்டு நிறைவை ஒட்டி பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அளித்த இராப்போசன விருந்தில் ஐக்கிய தேசியக்கட்சியின் முக்கிய மூன்று அமைச்சர்கள் உட்பட நால்வர் சமூகம் அளிக்கவில்லை என தெரிவிக்கப்படுகிறது. இந்த விருந்தில் தமிழ் தேசிய கூட்டமைப்புக்கு அழைப்பு



விடுக்கப்பட்ட நிலையில் கூட்டமைப்பின் அனைத்து எம்.பிக்களும் தவறாமல் கலந்து கொண்டிருந்தனர். எனினும் அமைச்சர்களான சஜித் பிரேமதாச, மங்கள சமரவீர, ஹரீன் பெர்னாண்டோ மற்றும் புத்திக பத்திரண ஆகியோர் கலந்து கொள்ளவில்லை. இவர்கள் மாத்தறையில சஜித்துக்கு ஆதரவாக நடைபெற்ற கூட்டத்தில் கலந்துகொண்டதாலேயே விருந்து பசாரத்தில் கலந்துகொள்ளவில்லையென தெரிவிக்கப்படுகிறது. இதேவேளை கட்சித் தலைமையை, கடுமையாக விமர்சித்து கட்சிக்குள் பிளவை ஏற்படுத்தும் வகையில் செயற்படும் உறுப்பினர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதற்குப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உத்தேசித்துள்ளதாக சிங்கள வார இதழொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இதன் ஆரம்பகட்ட செயன் முறையாகக் கட்சி உறுப்பினர்களிடம் சுயவிளக்கம் கோரப்படவுள்ளது என்றும், அதன்போது கட்சியின் யாப்பை மீறும் வகையில் செயற் பட்டிருந்தால்—கருத்துகளை முன்வைத்திருந்தால் ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதற்கு முடிவெடுக்கப்பட்டுள்ளது. அதேவேளை, கட்சியின் அனுமதி இல்லாமல் பேரணிகளுக்கான ஏற்பாடுகளைச் செய்யும் தொகுதி அமைப்பாளர்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுப்பதற்கும் கட்சித் தலைமை தீர்மானித்து விட்டதாகவும் கூறப்படுகின்றது.



ஐக்கிய தேசியக் கட்சியின் சனாதிபதி வேட்பாளராக சஜித் பிரேமதாஸவைக் களமிறக்குமாறு கோரி சஜித் அணி உறுப்பினர்களால் மாவட்டம் தோறும் பேரணிகள் நடத்தப்பட்டு வருகின்றன. இவ்வாறானதொரு பின்புலத்திலேயே பிரதமர் இவ்வாறு அதிரடி நடவடிக்கையில் இறங்கியுள்ளார் எனத் தெரியவருகின்றது. கட்சியின் செயற்குழுவில் கலந்துரையாடி தீர்க்கப்படவேண்டிய பிரச்சினையை சிலர் சந்திக்கு கொண்டுவந்துள்ளனர். இது ஏற் புடைய நடவடிக்கை அல்ல. என்று கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர் ஒருவர் சுட்டிக் காட்டியுள்ளார்

## எழுக தமிழ் எழுச்சிப் பேரணி வட மாகாண கடற்றொழிலாளர் சம்மேளனம் ஆதரவு



தமிழ் மக்கள் பேரவையின் ஏற்பாட்டில் எதிர்வரும் 16 ஆம் திகதி நடைபெற இருக்கும் எழுக தமிழ்—2019 எழுச்சிப் பேரணி காலத்தின் கட்டாய தேவை. இதற்கு அனைத்து தமிழ் மக்களும் தமது பரிபூரணமான ஒத்துழைப்பை வழங்க வேண்டுமென வட மாகாண கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசங்களின் சம்மேளன தலைவர் வே.தவச்செல்வம் ஆதரவு வழங்குவதாக கூறி கருத்துரைக்கும் போது தெரிவித்துள்ளார்.

எழுக தமிழ்—2019 எழுச்சிப் பேரணி தொடர்பில் வட கிழக்கு பொது அமைப்புகள் மற்றும் அரசியல் கட்சிகளுடன் தமிழ் மக்கள் பேரவை கலந்துரையாடல்களை நடத்திவருகின்றது. அதன் தொடர்ச்சியாக நேற்று சனிக்கிழமை மாலை 4.30 மணிக்கு யாழ்.கந்தர்மடம் சந்தியில் அமைந்துள்ள தமிழ் மக்கள் பேரவையின் தலைமை அலுவலகத்தில் வட மாகாண கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசங்களின் சம்மேளன நிர்வாகிகளுடன் கலந்துரையாடல் நடைபெற்றுள்ளது.

இக்கலந்துரையாடலின் முடிவில் எழுக தமிழ்—2019 எழுச்சிப் பேரணிக்கு 122 கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்களை பிரதிநிதித்துவம் செய்யும் 10 சமாசங்களை உள்ளடக்கிய வட மாகாண கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசங்களின் சம்மேளனத்தின் சார்பில் பூரண ஆதரவினை வழங்குவதாக தெரிவித்து கருத்துரைக்கும் போதே அதன் தலைவர் வேலுப்பிள்ளை தவச்செல்வம் இவ்வாறு கூறியிருந்தார்.

தமிழர்கள் அரசியல் பலம்பெற்றவர்களாக மாறும்போதுதான் தமிழர்களின் பிரச்சினைகளுக்கான தீர்வினைக் காணமுடியும் என்ற அடிப்படையில் எழுக தமிழ்—2019 எழுச்சிப் பேரணிக்கு தங்களது ஆதரவினை வழங்குவதாகவும் இதற்கு அனைத்து தமிழ் மக்களும் தமது பரிபூரண ஒத்துழைப்பினை வழங்க வேண்டுமெனவும் தெரிவித்துள்ளார்.

சுமார் ஒன்றரை மணி நேரம் நடைபெற்ற இச்சந்திப்பில் தமிழ் மக்கள் பேரவை இணைத்தலைவர்களில் ஒருவரான முன்னாள் நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன் உள்ளிட்ட தமிழ் மக்கள் பேரவை பிரதிநிதிகள், எழுக தமிழ்—2019 ஏற்பாட்டுக் குழுவைச் சேர்ந்தவர்களும் வட மாகாண கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசங்களின் சம்மேளனத்தின் பொருளாளர் செ.சிவஞானராசா ஆகியோர் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## மின்சாரம் தாக்கி சிறீலங்கா இராணுவ சிப்பாய் பலி

சிகிரிய பகுதியில் உள்ள இனாமலுவ இராணுவ முகாம் ஒன்றில் மின்சாரம் தாக்கி இராணுவ சிப்பாய் ஒருவர் உயிரிழந்துள்ளதாக காவல்துறையினர் தெரிவித்துள்ளனர். இவ்வாறு உயிரிழந்தவர் 23 வயதுடைய ஊவா பரணமக பகுதியைச் சேர்ந்த அசங்க உதயகுமார என்பவர் ஆவார். மின்சாரம் தாக்கப்பட்டமையடுத்து தம்புள்ளை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னரே இவர் உயிரிழந்துள்ளார்.

2ம் பக்கத் தொடர்ச்சி...

ஐ.நாவினால் அடையாளம் காணப்பட்டவர் இவர். வெள்ளைக் கொடியுடன் சரணடைந்தவர்கள் படுகொலை செய்யப்பட்டமை உள்ளிட்ட போர்க் குற்றங்களுடன் தொடர்புடையவர் என்று இவர் மீது குற்றச்சாட்டுக்கள் உள்ளன. இவர், மீதான குற்றச்சாட்டுகளுக்கு நம்பகமான ஆதாரங்கள் இருக்கின்றன என்று ஐ.நா விசாரணை அறிக்கைகள் கூறியிருந்தன. இவ்வாறான ஒருவர், இராணுவத் தளபதியாக நிய மிக்கப்பட்டுள்ளமை சர்வதேசத்துக்கு விடுக்கப்பட்டுள்ள ஒரு சவால். போர்க்குற்றங்கள், மனித உரிமை மீறல்கள் தொடர்பாக பொறுப்புக்கூற நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஜெனிவாவில் சிறீலங்கா உறுதி அளித்திருந்தது. ஆனால் அதற்கான எந்த நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை. இந்த விடயத்தில், கடந்த நான்கரை ஆண்டுகளில் சிறீலங்கா மீது சர்வதேச அழுத்தங்களும் கொடுக்கப்படவில்லை. அரசாங்கத்துடன் நல்லிணக்க அரசியலை நடத்தும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் இவ்விடயத்தில் அரசாங்கத்தைப் பாதுகாக்கும் வகையிலேயே நடந்துகொண்டது. இவைதான் போர்க் குற்றம்சாட்டப்படும் ஒருவரை துணிச்சலுடன், இராணுவத் தளபதியாக நியமிப்பதற்கான துணிச்சலை சிறீலங்கா சனாதிபதிக்குக் கொடுத்தது.

பலரையும் சமாளிக்கும் வகையில் அல்லது சமாதானப்படுத்தும் வகையிலேயே இந்த நியமனத்தை மைத்திரி வழங்கியிருக்கின்றார். குறிப்பாக பொதுஜன பெரமுனையின் சார்பில் சனாதிபதி வேட்பாளராகப் போட்டியிடும் கோத்தாபாய ராஜபக்சவுக்கு மிகவும் நெருக்கமானவராக — வேண்டியவராக சவேந்திர சில்வா கருதப்படுகின்றார். இப்போது தன்னுடைய பதவிக்காலத்தின் விளிம்பில் நிற்கும் மைத்திரி, தன்னுடைய அரசியல் எதிர்காலத்துக்கு கோத்தாவை நம்பியிருக்கின்றார். அதனால், கோத்தாவின் எதிர்பார்ப்பை நிறைவேற்றும் வகையில் இந்த நியமனம் வழங்கப்பட்டிருக்கலாம் என்ற கருத்தையும் புறக்கணித்துவிட முடியாது. இந்த நியமனத்தின் மூலம் போர்க் குற்றச்சாட்டுக்களுக்குப் பொறுப்புக் கூறப்படப்போவதில்லை என்பதையும், குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் மீது விசாரணை நடத்தப்படுவதற்குப் பதிலாக, அவர்களுக்குப் பதவி உயர்வு கொடுத்து காப்பாற்றப்படுவார்கள் என்பதையும் மைத்திரி உணர்த்தியிருக்கின்றார். இது நல்லிணக்கம் என சர்வதேசத்தின் முன்பாக அரசாங்கம் சொல்லிக்கொள்ளும் அனைத்தும் வெறும் நாடகம் என்பதை வெளிப்படுத்தியிருக்கின்றது. இதற்கு எதிராக கடுமையான நகர்வுகளை சர்வதேச சமூகம் மேற்கொள்ள வேண்டும். இல்லையெனில் மனித உரிமைகள் பேரவை உட்பட சர்வதேச சமூகத்தின் மீதான நம்பிக்கையை ஈழத் தமிழர்கள் முற்றாகவே இழந்துவிடுவார்கள் என்பதை வலியுறுத்திச் சொல்லிக்கொள்ள விரும்புகின்றோம்."

ஆகஸ்ட் 30

# சர்வதேச காணாமல் ஆக்கப்பட்டோர் தினம்

## INTERNATIONAL DISAPPEARANCE DAY



திட்டமிட்டு
காணாமல்
ஆக்கப்பட்ட
எமது
உறவுகளை
மீட்கும் புனிதப்
பணியில்
உலகத்
தமிழர்கள்
அனைவரும்
ஒன்றிணைய
வேண்டும்

**வடக்கு, கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் சங்கம்**

# உலகத் தமிழர்கள் அனைவரும் எம்முடன் இணைந்து போராட வேண்டும்

## வடக்கு கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தின் தலைவிகள் பேட்டி

**ஆகஸ்ட் 30 சர்வதேச காணாமல் ஆக்கப்பட்டோர் தினமாகும். உலகளாவிய ரீதியில் மனிதனை மனிதனே காவு கொள்ளும் இரக்கமற்ற செயலைக்கண்டித்தும் காணாமல் ஆக்கப்படுவோர் தொடர்பில் உலக சமூகத்தின் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கோடு ஐ.நா. மன்றம் ஆகஸ்ட் 30 திகதியை அனைத்துலக காணாமல் ஆக்கப்பட்டோர் தினமாக பிரகடனம் செய்துள்ளது. இலங்கை தீவில் தமிழ் மக்களை இன அழிப்பு செய்வதற்கான ஒரு போர் ஆயுதமாகவே காணாமல் ஆக்கப்படுவதை இலங்கை அரசு நடைமுறைப்படுத்தி வருகிறது. தமிழர்கள் என்ற காரணத்திற்காக இறுதி யுத்தத்தில் சரணடைந்த குழந்தைகள்கூட இலங்கை அரசபடைகளால் திட்டமிட்டு காணமல் ஆக்கப்பட்டுள்ளார்கள். காணாமல் ஆக்கப்பட்ட தமது உறவுகளை மீட்க வேண்டும் என்ற ஒரே இலட்சியத்துடன் தாயகம் எங்கும் காணாமல் ஆக்கப்பட்டவர்களை இழந்து வாடும் குடும்ப உறுப்பினர்கள் குறிப்பாக பெரும்பாலும் பாதிகப்பட்ட பெண்கள் சுயமாக ஒன்றிணைந்து உறவுகளை தேடும் சங்கத்தை கட்டமைத்து அரசின் பல்வேறு அச்சுறுத்தல்கள் சொல்லமுடியாத துன்பங்களுக்கு மத்தியிலே கனதியான தொடர் போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றார்கள். தமிழர்களின் உரிமைப் போராட்டத்தை இன்று உயிர்ப்புடன் வைத்திருக்கும் சக்திகளாக காணாமல் ஆக்கப்பட்டவர்களை இழந்து வாடும் குடும்ப உறவுகளே எழுச்சியுடன் நிமிர்ந்து நிற்கிறது. இந்த நிலையில் சர்வதேச காணாமல் ஆக்கப்பட்டோர் தினத்தில் ஆகஸ்ட் 30 திகதி தாயகத்திலே மாபெரும் கண்டன ஆர்பாட்டத்தை முன்னெடுப்பதற்கான ஒழுங்குகளை வடக்கு கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் சங்கம் முன்னெடுத்துள்ள நிலையில் சங்கத்தின் மாவட்ட தலைவர்கள் இலக்கு மின்னிதழுக்கு வழங்கிய கருத்துக்கள்.**

### சர்வதேச குற்றவியல் நீதிமன்றமே ஒரே தீர்வு

**வடக்கு கிழக்கு மாகாணத்தை சேர்ந்த வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் சங்கத்தின் இணைப்பாளர் கனகரஞ்சினி ஜோகராசா**



போர்க் காலத்தில் காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் சரணடையும்போது மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வா தலைமை தாங்கிய படையணி ஊடாகவே அவர்களை கையளித்திருக்கின்றோம். தற்போது அவர்கள் காணாமலாக்கப்பட்டிருக்கின்றார்கள். ஆனால் சவேந்திர சில்வாவுக்கு இராணுவத்தளபதி பதவி வழங்கப்படுகின்றது. எமது உறவுகள் பற்றிய கேள்விக்கு அவர் பதிலளிப்பதாகவும் இல்லை. நாங்கள் தாயகத்தின் அனைத்து பகுதிகளிலும் எமதுபோராட்டத்தினை தொடர்ச்சியாக மேற்கொண்டு வருகின்றோம்.

அவை காலச்சூழலுக்கு ஏற்ப வடிவங்கள் மாறினாலும் நீதிக்கான பயணம் தொடர்ந்துகொண்டே இருக்கின்றது. உள்நாட்டில் அரசாங்கமோ, படைத்தரப்போ எமது விடயங்களுக்கு பதிலளிப்பதாக இல்லை. இந்த நிலையில் தான் நாம் சர்வதேசத்தினை நாடினோம். இலங்கை அரசாங்கத்திற்கு கால அவகாசம் வழங்கக் கூடாது என்றும் வலியுறுத்தினோம். எனினும் தமிழ் பிரதிநி—திகள் சிலரின் தலை அசைப்பால் சர்வதேச நாடுகளும் இலங்கை அரசாங்கத்திற்கு கால அவகாசம் வழங்கியிருந்தன. ஆனால் எதுவுமே நடைபெறவில்லை என்பதை இன்று கண்கூடாக காணக்கூடியதாக உள்ளது. ஆகவே தொடர்ந்தும் சர்வதேச நாடுகள் பொறுத்துக்கொண்டிருக்க கூடாது.

சரணடைந்து, கடத்தப்பட்டு, விசாரணைக்காக அழைக்கப்பட்டு காணாமலாக்கப்பட்ட எமது உறவுகள் விடயத்தினை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் பிரதான பொருளாக கொள்ள வேண்டும். எமது சாட்சிகளுக்கு அமைவாக உரியவர்களை நீதிமன்றின் முன்நிறுத்தி விசாரணைக்கு உட்படுத்த வேண்டும். தற்போதே உறவுகளை தேடியவர்கள் நாற்பது பேர் வரையிலானவர்கள் இறந்துவிட்டார்கள். அதுபோன்ற நிலைமை தான் அனைவருக்கும் ஏற்படும் என்றார்.

### அச்சுறுத்தல்களுக்கு ஒருபோதும் அஞ்சப்போவதில்லை

**மட்டக்களப்பு மாவட்ட சங்கத் தலைவி அமலநாயகி,**

வலிந்து காணா மலாக்கப்பட்ட உறவுகளை ஒன்றிணைத்து எமது உறவுகளுக்காக நீதிகேட்டு போராட ஆரம்பித்த போது எம்மை புலனாய் வாளர்கள் தொடர்ந் தார்கள். காணொளி எடுத்தார்கள். நாம் செல்லு மிடமெல்லாம் பின்தொடர்ந் தார்கள்.

காணாமலாக் கப்பட்ட விவகாரத்தினை கைவிடச் செய்வதற்காக எமக்கு எதிராக பல முயற்சிகளை எடுத்தார்கள். குறிப்பாக என்னை இலக்கு வைத்து திட்டமிட்ட அச்சுறுத்தல்கள், தாக்குல்கள் என அனைத்தையுமே முன்னெடுத்துள்ளார்கள். இறுதியாக என்மீது தாக்குதலையும் திட்டமிட்டு மேற் கொண் டார்கள். எனக்கு புலம்பெயர் தேசங் களிலிருந்து நிதி அனுப் படுவதாக கூறி என்னை கைது செய்வதற்கு விளைந்தார்கள். ஆனால் அவற்றையெல்லாம் கண்டு அஞ்சி எமது நீதிக்கான நியாயமான கோரிக்கையை கைவிடவில்லை.



எமது உறவுக்களுக்கு என்ன நடந்தது என்பதை அறிவதற்கு நாம் எமது உயிர்களை துச்சமென மதித்தே வீதிக்கு இறங்கி யுள்ளோம். இதனை இலங்கை அரசாங்கம் புரிந்து கொள்ளவேண்டும். சர்வதேசத்திடமே நீதிகேட்கின்றோம். அவர்கள் எங்களுக்கான உத்தரவாதங்களை தர வேண்டும். நாம் ஒன்றிணைந்து போராட்டத்தினை முன்னெடுத்து சர்வதேசத்தின் கவனத்தினை ஈர்ப்போம் என்பதில் மாற்றமில்லை என்றார்.

### நாமும் காணாமலாக்கப்படும் ஆபத்துள்ளது

**முல்லைத்தீவு மாவட்ட சங்கத் தலைவி மதியசுரே ஈஸ்வரி.**



போர்க் குற்றங்களுடன் தொடர்புடைய இராணுவத் தளபதியாக சவேந்திர சில்வா நியமிக்கப் பட்டுள்ள நிலையில் அத்தகைய தொருவர் சனாதி பதியாக வந்தால் எம்முடைய உறவுகளைத் தேடிப் போராடிக் கொண்டிருக்கின்ற நாங்களும் காணா மலாக்கப்படும் நிலையே ஏற்படும். சனாதிபதி மைத்திரிபால சிறிசேன எம்மை முழுமையாக ஏமாற்றிவிட்டார். காணி விடுவிப்பு, காணாமல்போனோர் விவகாரம் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பில் வாக்குறுதிகளை அளித்து ஆட்சிக்கு வந்த அவரின் பதவிக்காலம் முடிவடையப் போகிறது.

மஹிந்தவிடமிருந்து ஆட்சியைக் கைப்பற்றி அரசாங்கம் அமைத்ததைப் அவர் மீண்டும் ராஜபக்சவிடத்திலேயே ஒப்படைத்துவிட்டுப் போகப்போகிறார். கடந்த மூன்று வருடகாலமாக எமது உறவுகளுக்கு என்ன நேர்ந்தது என்ற உண்மையை வெளிப்படுத்துமாறு வலியுறுத்தி நூற்றுக்கும் மேற்பட்ட போராட்டங்களை நடத்தியிருக்கிறோம். எமது பிரச்சினைக்கு எவ்வித நிரந்தர தீர்வும் பெற்றுத்தரப்படாத அதேவேளை, சர்வதேசமும் எமது போராட்டங்கள் தொடர்பில் பாராமுகமாகவே இருந்து வந்திருக்கிறது. எதிர்காலத்தில் சர்வதேசமும் எம்மை கைவிடும் துர்ப்பாக்கிய நிலைமை ஏற்பட இடமளிக்க கூடாது என்றார்.

### ஐ.நா தீர்க்கமான பதிலளிக்க வேண்டும்

**அம்பாறை மாவட்ட சங்கத் தலைவி தம்பிராசா செல்வராணி,**



தொடர்ச்சியாக சுழற்சி முறையிலான போராட்டத்தை மேற்கொண்டு வரும் வலிந்து காணாமல் ஆக்கப் பட்டவர்களின் உறவுகளாகிய நாம் கடந்த ஏப்ரல் 21 ஆம் திகதி நடாத்தப்பட்ட தற்கொலைக் குண்டுத்தாக்குதலின் பின்னர் எமது போராட்ட வடிவத்தினை மாற்றியுள்ளோம்.

சர்வதேச காணா மலாக்கப்பட்ட தினமான ஓகஸ்ட் 3ஆம் திகதியை ஒவ்வொருமாதமும் நினைவு கூர்ந்து மாதாந்தம் 30 ஆம் திகதிகளில் கவனயீர்ப்பு போராட்டத்தினை தொடர்ச்சியாக முன்னெடுத்து வருகின்றோம்.

உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதலில் கொல்லப் பட்டவர்களுக்கும் காயமடைந்தவர்களுக்கும் அரசாங்கம் உடனடியாக இழப்பீடுகள் மற்றும் கொடுப்பனவுகள் என்பனவற்றை ஏற்பாடு செய்துள்ளது. ஆனால் போர் நிறைவடைந்து பத்து வருடங்கள் சென்றுள்ள நிலையிலும் ஏன் எமது உறவுகளை தேடிக்கண்டு பிடிப்பதற்கான ஏற்பாடுகளை முன்னெடுக்கவில்லை. நாம் தமிழர்கள் என்பதால் எமக்கு ஒரு நீதியும் பெரும்பான்மையினருக்கு ஒரு நீதியுமாகவே உள்ளது. இலங்கை அரசாங்கம் பாதிக்கப்பட்ட மக்கள் விடயத்திலாவது பாராமுகம் காட்டாது. சரி சமமாக நடக்க வேண்டும். ஐ.நாவின் அமர்வில் யுத்தக்குற்றம் தொடர்பாகவும், காணாமலாக்கப்பட்டவர்கள் தொடர்பாகவும் சரியான முறையில் விசாரணை செய்து ஒரு தீர்க்கமான முடிவினை பெற்றுத்தரவேண்டும் என்றார்.

### அனைவருமே ஏமாற்றி விட்டார்கள்

**திருகோணமலை மாவட்ட சங்கத் தலைவி செல்வராஜா சரோஜாதேவி**



காணாமலாக்கப்பட்ட எமது உறவுகள் தொடர்பாக இலங்கை அரசாங்கம் எந்தவிதமான பதிலையும் வழங்கவில்லை. எனினும் இலங்கை அரசாங்கம் சர்வதேசத்திற்கு வழங்கிய வாக்குறுதிகளுக்கு அமைவாக அதுவே எமக்கான நியாயமான தீர்வை வழங்கும் என்றும் நம்பியிருந்தோம். ஆனால் அவை எதுவுமே நடைபெறவில்லை. இலங்கைக்கு கால அவகாசம் வழங்கிய சர்வதேசமும் எம்மை ஏமாற்றிவிட்டதாகவே உணர்கின்றோம். சிங்கள பௌத்தவாத அரசினால் எமக்கான தீர்வினை நீதியினை வழங்கமுடியாது என்பதனை சாதாரண மக்களாகிய நாம் புரிந்து கொண்டுள்ளோம்.

ஆயினும் ஐக்கியநாடுகள் சபையும் சர்வதேச நாடுகளும் அதனை புரிந்து கொள்ளவில்லை

மஹிந்த காலத்தில் மட்டுமல்ல தற்போதைய ஆட்சியிலும் நீதியான விசாரணைகள் முன்னெடுக்கப்படவில்லை. காணாமலாக் கப்பட்டோர் தொடர்பான பட்டியல் வெளியிடப்படவில்லை, அலுவலகத்தினை அமைத்து அனைத்தையும் முடக்குவதற்கு முயற்சிக்கின்றர்கள். நீதி வழங்கல் தொடர்பாக மௌனம் சாதிக்கின்றனர். திட்டமிட்ட குடியேற்றங்கள், பௌத்த ஆக்கிரமிப்புக்கள், பாரம்பரிய வரலாறுகளை மாற்றுகின்றமை ஐக்கியநாடுகள் சபையின் இனவழிப்பு தொடர்பான வரைவிலக்கணத்தின் படி மேற்படி செயற்பாடுகளும் கட்டமைக்கப்பட்டஇன அழிப்பு செயற்பாடுகளே என்றார்.

## காலம்கடத்தி மழுங்கடிக்க முயற்சி

**மன்னார் மாவட்ட உறவினர்களின் சங்க தலைவி மனுவல் உதயச்சந்திரா**



நாங்கள் காணாமல் போன எங்களுடைய பிள்ளைகளை தேடி அலைகின்றோம். ஆனால் இலங்கை அரசாங்கங்கள் இந்த விடயத்தினை காலம்கடத்தவே முயல்கின்றன.

எமது விடயத்தினை பொருட்டாகவே கருதாது இருந்து வருகின்றார்கள். நாங்கள் ஆடு, மாட்டை படையினரிடம் கொடுக்கவில்லை. எங்களிடம் 'மறப்போம் மன்னிப்போம்' என்பதற்கு இடமே இல்லை.

எமது உறவுகள் இருக்கின்றனரோ, இல்லையோ? தற்போது இருக்கின்ற உறவுகளை விடச் சொல்லியே கேட்கின்றோம். அவர்கள் இல்லை என்றால் அவர்களை என்ன செய்துள்ளனர். ஏன்? எதற்காக எமது உறவுளை பிடித்துக்கொண்டு சென்றனர். அவர்களை என்ன செய்துள்ளனர். இவற்றுக்கான பதில்களை நீதியுடன் கூறவேண்டும். இலங்கை அரசில் நம்பிக்கை இல்லாத காரணத்தினாலேயே ஐ.நாவை நம்பியுள்ளோம். இருப்பினும் தற்போது வரையில் அரசாங்கம் எதனையுமே செய்யவில்லை. எனவே ஐ.நா சபை இலங்கை அரசாங்கத்துக்கு இனியும் கால அவகாசம் வழங்கக் கூடாது. இந்தவிடயத்தில் உடனடியாக காத்திரமான நடவடிக்கையை ஆரம்பிக்க வேண்டும் என்றார்.

## கால அவகாசம் வெறும் கண்துடைப்பே.

**வவுனியா மாவட்ட இணைப்பாளர் திருமதி சரோஜா சண்முகம்பிள்ளை**

எமது பிள்ளைகளை தொலைத்து 10 வருடங்கள் கடந்தும் இன்றுவரை தீர்வில்லை. இலங்கைக்கு இரண்டு வருட கால அவகாசம் வழங்கப்பட்டது. கண் துடைப்புக் காக காணாமல் போனோர் அலுவலகத்தை இலங்கை அரசு ஆரம்பித்தது. இதைப்போலவே கடந்தகாலங்களில் பல ஆணைக்குழுக்களை அமைத்து எம்மை ஏமாற்றினார்கள். எமது பிள்ளைகளை காணாமல் ஆக்கியது போன்று



எம்மைகாணாமல் போக செய்வதற்காக மிகுதியாக உள்ள எம்மை எமது குடும்பங்களின் விபரங்களையும் பதிவு செய்தார்கள். என எண்ணத்தோன்கிறது. ஏனெனில் கால அவகாசம் கொடுத்தததற்கு ஏற்றவாறு எந்த நன்மையும் தீர்வும் எமக்கு வழங்கப்படவில்லை.

எமது பிள்ளைகள் உயிருடன் இருக்கிறார்கள் என்ற நம்பிக்கையில் போராடு கிறோம். சர்வதேசம் இலங்கை அரசுக்கு இனியும் கால அவகாசம் வங்கக் கூடாது. எமது பிள்ளைகளுக்கு என்ன நடந்தது என்ற உண்மை தெரிய வேண்டும். என்பதுடன் எமக்கு தீர்வு கிடைக்க வேண்டும் என்றால் உடனடியாக சர்வதேசம் தலைதலையிட்டு எமக்கு நீதியை பெற்றுத் தரவேண்டும்.

## சர்வதேசம் உடன் தலையிட வேண்டும்

**யாழ். மாவட்ட காணாமலாக்கப்பட்டோர் சங்கத் தலைவி இளங்கோதை.**

எமது உறவுகளை தேடிய போராட்டம் தொடர்ந்து கொண்டிருக்கின்றது. எமது ஒவ்வொரு போராட்டங்களைம் முடக்கி எமது நீதிக் கோரிக்கையை அமிழ்த்தி விடுவதே தென்னிலங்கை பௌத்த சிங்களவாத தரப்புக்களின் அடிப்படை நோக்கமாக இருக்கின்றது என்பதில் இரண்டு கருத்துக்கு இடமில்லை. யாழில் காணாமலாக்கப் பட்டவர்களுக்கான அலுவலகம் திறக்கப்படுகின்றது. கடந்த காலங்களில் எத்தனையோ ஆணைக்குழுக்கள் அமைக்கப்பட்டிருந்தன. அவற்றின் முன்னிலையில் நாங்கள் சாட்சியங்களை வழங்கியிருந்தோம். எமது சாட்சியங்கள் வெறுமனே வாக்குமூலங்கள் போன்று பதியப்பட்டனவே தவிர அவை அனைத்துமே கண்துடைப்பு நாடகங்களே. காணாமலாக்கப்பட்டவர்கள் அலுவலகம் பற்றிய சட்டமூலம் நிறைவேற்றப்பட்டு இத்தனை காலத்திற்கு பின்னரே கிளைகள் நிறுவப்படுகின்றன. அதிலேயே இத்துணை தாமதங்கள் என்றால் ஆயிரக்கணக்கில் இருக்கும் எமது உறவுகளின் முறைப்பாடுகளை அவர்கள் விசாரணைக்கு உட்படுத்தி தீர்ப்பளிப்பது எப்போது?

எமது கோரிக்கைகளை காலம் தாழ்த்தச் செய்து அதனை நீர்த்துப் போகச் செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. போர் நிறைவுக்கு வந்து பத்தாண்டுகள் ஆகின்ற நிலையில் இனியும் உள்நாட்டில் இந்த விடயங்கள் சரியாக கையாளப்படும் என்ற நம்பிக்கை எமக்கு இல்லை. ஆகவே சர்வதேச தரப்புக்கள் உடனடியாக தலையீடு செய்து இவ்விடயதிற்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என்றார்.

# சஜித்தை பிரதமராக நியமிக்கும் மைத்திரியின் திட்டம் தலைகீழானது

ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் சஜித் பிரேமதாசவை பிரதமராக நியமிக்க சிறீலங்கா அதிபர் மைத்திரிபால சிறிசேன மேற்கொண்ட புதிய முயற்சி தோல்வியில் முடிந்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

சனாதிபதி வேட்பாளர் விடயத்தில் ஐதேக தலைவர் ரணில் விக்ரமசிங்கவுக்கும், பிரதித் தலைவர் சஜித் பிரேமதாசவுக்கும் இடையில் இழுபறிகள் நிலவி வருகின்றன.



இந்த நிலையில் சஜித் பிரேமதாசவை சனதிபதி வேட்பாளராக நியமிக்கக் கோரி, ஐதேகவின் பெரும்பான்மை உறுப்பினர்கள் பிரதமர் ரணில் விக்ரமசிங்கவிடம் ஆவணம் ஒன்றை கையளித்திருந்தனர். இந்த ஆவணத்தின் அடிப்படையில், ரணில் விக்ரமசிங்கவை நீக்கிவிட்டு, சஜித் பிரேமதாசவை பிரதமராக நியமித்து, புதிய அமைச்சரவையை அமைக்குமாறு கோருவதற்கு சிறீலங்கா சனாதிபதி மைத்திரிபால சிறிசேன முயற்சிகளை மேற்கொண்டிருந்தார்.

எனினும், இந்த முயற்சிகளுக்கு சஜித் பிரேமதாச ஒத்துழைக்க மறுத்து விட்டார் என தகவல்கள் வெளியாகியுள்ளன.பிரதமர் பதவியை ஏற்றுக் கொண்டால், கட்சியின் ஆதரவாளர்கள் தன்னைக் காட்டித் கொடுத்தவர் என்று குற்றம்சாட்டுவார்கள் எனவும் அதனால் தன் மீது வெறுப்படைவார்கள் என்றும், சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.


இவ்வாறு பதியேற்றால் அது அரசியல் சதித் திட்டமாகவே அழைக்கப்படும் என்ற அச்சத்தினால், அதற்கு ஒத்துழைக்க அவர் மறுத்து விட்டார் என்றும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

கடந்த ஒக்ரோபர் 26ஆம் நாள் நடந்த ஆட்சிக் கவிழ்ப்பு போன்ற சதித்திட்டம் ஒன்றை நிறைவேற்றும் முயற்சிகள் நடந்து வருவதாக, கடந்தவாரம் அலரி மாளிகையில் நடந்த செய்தியாளர் சந்திப்பில், ஐதேகவின் உறுப்பினர் பேராசிரியர் ஆஷு மாரசிங்க தெரிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# அலுவலகத்தை அதிகாலையில் திறந்து வைத்ததன் உள்நோக்கம் என்ன?

## காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் ஆவேசம்

வவுனியா ஊடக அமையத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர்கள் இவ்வாறு கூறினர். அவர்கள் மேலும் தெரிவிக்கையில், சர்வதேசத்துக்கான கண்துடைப்பாக இந்த அலுவலகம் திறக்கப்பட்டுள்ளதே தவிர மக்களின் தேவைக்காக இது திறக்கப்படவில்லை.





நாம் இந்த அலுவலகத்தை எதிர்த்து போராடியபோதிலும் நீங்கள் யாருடைய அனுமதியும் இன்றி திறந்துள்ளீர்கள்.

இது காணாமல் ஆக்கப்பட்டோருக்காக திறக்கப்பட்டதா அல்லது வேறு யாருக்காகவும் திறக்கப்பட்டதா? பட்டப்பகலில் திறக்கவேண்டிய அலுவலகத்தை அதிகாலையில் திறக்கவேண்டிய தேவை என்ன?. எங்கள் உறவுகளுக்கு நீதியைத் தேடி தரப்போகின்றீர்களா இல்லாவிட்டால் உங்கள் தேவைகளை நிறைவேற்றுவதற்காக இதனை திறந்தீர்களா எனக் காணாமல் ஆக்கப்பட்டோருக்கான அலுவலகத்தில் யாழ்ப்பாணம், ஒக. 25 நாவற்குழி ரயில் கடவைக்கு அருகாமையில் வேகக் கட்டுப்பாட்டை இழந்த வாகனம் வீட்டு மதிலுடன் மோதி விபத்துக்குள்ளானது. இதில் வாகனம் சேதமடைந்ததுடன், மின்சார வயர்களும் அறுந்துள்ளன. மதிலும் சேதமடைந்துள்ளது. இந்த விபத்தில் சிறுமி ஒருவர் காயமடைந்தார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

# காணாமல் ஆக்கப்பட்டோர் என்றொரு இனம்

**தீபச்செல்வன்**

ஈழத் தமிழர்களின் இன விடுதலைப் போராட்டத்தை சிதைக்க நினைத்த சிங்கள அரசு அவர்களுக்கு இனப் பேரழிவை உண்டு பண்ணி, வரலாறு முழுதும் மீள முடியாத இனமாக ஆக்க நினைத்தது. ஈழப் போரின் இறுதியில் சிறிதும், தயக்கமின்றி ஈழத் தமிழ் இனத்தை வேட்டையாடியது சிங்கள அரசு. அதற்கான உலகின் இடமளிப்புத்தான் சரணடைந்தவர்களும் கையளிக்கப் பட்டவர்களும் காணாமல் போய் விட்டனர் என்று கைவிரிக்கும் பெரும் தைரியத்தை சிங்கள அரசுக்கு கொடுத்தது. இது ஈழத் தமிழ் இனத்தையே காணாமல் ஆக்கும் தைரியத்தையும் கொடுத்திருப்பதைதான் இந்த நாளில் உணர வேண்டும்.

இலங்கேஸ்வரன் என்பது இலங்கையை ஆண்ட தமிழ் மன்னர்களுக்கு சூட்டப்படும் பெயர் என்று வரலாற்று பத்தி எழுத்தாளர் கலாநிதி த. ஜீவராசா எழுதியிருந்தார். அந்த அடிப்படையில்தான் இராவணனை இலங்கேஸ்வரன் என்கிறோம். கம்பராமாயணமும் அப்படிச் சித்திரிக்கிறது. ஒரு காலத்தில் இலங்கேஸ்வரர்களாக ஈழத்தை ஆண்ட தமிழினம் பின்னர், சிறுபான்மை இனமானது. இலங்கையில் இரண்டு சம அந்தஸ்துள்ள நாடுகள் அமையக் கூடிய சூழல் பிரித்தானிய வெளியேற்றத்தின்போது ஏற்பட்ட போதும் நல்லிணக்கம் பேசி அவ் வாய்ப்பு தவறவிடப்பட்டது.

வடக்கு கிழக்கு சிறுபான்மை தமிழர்கள் ஆக்கப்பட்ட ஈழத் தமிழ் மக்கள், இன்றைக்கு வடக்கு தமிழர்கள் என்கின்ற அளவில் கிழக்கின் சிங்கள மற்றும் இஸ்லாமியவாதக் குடியேற்ற சூழல்கள் தள்ள முற்படுகின்றன. தமிழீழமே இன்றைக்கு சுருங்கிப் போ—யிருப்பதைப் போன்றதொரு தோற்றம் ஏற்படுத்தப்படுகின்றது. தமிழீழ விடுதலைப் புலிகளின் காலத்தில் தமிழீழம் குறித்து பேசும் ஒரு சிங்கள பேரினவாதிகூட வடக்கு கிழக்கிற்கு அதிகாரம் தரமாட்டோம் என்று சொல்லுவார். இன்று வடக்கிற்கு அதிகாரத்தை தர ஒரு போதும் இடமிளிக்கோம் என்று பேசப் பார்க்கிறார்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் காலத்தில் இருந்த பெரும்பாலான நிலங்கள் இன்று காணாமல் ஆக்கப்பட்டுவிட்டன. எமது தலைமைகள் ஆளும் சிங்கள அரசை காப்பாற்றுகின்றன. மைத்திரிபால சிறிசேனவை ஆட்சியில் அமர்த்தினோம். அவரது ஆட்சியை தொடர்ந்து பாதுகாக்க உதவுகிறோம். சர்வதேசத்தை துணைக்கு அழைத்துவிட்டு, அதன் பிடியிலிருந்து தப்பவும் நாமே உதவிக் கொண்டிருக்கிறோம். மைத்திரியுடன் ரணிலுக்கு முரண்பாடு. ரணிலை நாம் காப்பாற்றுகிறோம். ரணில் அரசு இன்றைக்கு தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களால்தான் காப்பாற்றப்பட்டிருக்கிறது. ஒரு புறத்தில் தமிழ் தலைமைகளின் ஆதரவை பெற்றுக் கொண்டு மறுபுறத்தில் தமிழர்களின் உரிமைகளையும் பண்பாட்டு அம்மசங்களையும் திருடும் காணாமல் ஆக்கும் வேலையை சிங்கள அரசும் அதன் தலைவரும் பிரதமரும் செய்து கொண்டிருக்கின்றனர். இந்த நாளின் பெரும் சூத்திரதாரிகளும் இந்த நாளின் எதிரிகளுமே இலங்கை ஆட்சியாளர்களைப் போன்றவர்கள்தான். மணலாறு என்ற ஈழத் தமிழர்களின் பிரதேசத்தை காணாமல் ஆக்கி, வெலி ஓயா உருவாக்கப்பட்டது. இத்தகைய செயல்களுக்காகவே ஈழத் தமிழர்கள் ஆயுதம் ஏந்திப் போராடும் சூழலே ஏற்பட்டது.

ஆனால், இன்றைக்கு வந்து இலங்கை சனாதிபதி மைத்திரிபால சிறிசேன, ஆமையன் குளம் என்ற தமிழ் குளத்தை காணாமல் ஆக்கிவிட்டு, அதை சிங்களக் குளமாக்கி திறந்து வைத்துச் செல்கிறார். ஈழ இன விடுதலைக்கான போராட்டம் இலங்கை தீவில் நடந்தது. அதனை சிதைக்க தமிழ் இன அழிப்பை சிங்கள அரசு மேற்கொண்டது. இவ்வளவு நடந்த பின்னரும், வவுனியா ஒதியமலையை அண்டிய பகுதியில் நாளும் பொழுதும் ஒரு சிங்களக் குடி குடியேறிக் கொண்டிருக்கின்றது. யாரோ ஒரு பிக்கு வந்து புத்தர் சிலையுடன் குடி ஊன்றிக் கொண்டிருக்கிறார்.




செம்மலையில் இந்து ஆலய வளாகத்தை அடாத்தாக பிடித்து, பௌத்த சிங்களப் பிக்கு பாரிய புத்தர் சிலை கட்டி விகாரை அமைக்கிறார். வடக்கு கிழக்கில் ஆயிரம் இடங்களில் புத்தர் சிலைகளை அமைக்க சனாதிபதி சிறிசேனதான் திட்டம் தீட்டியவர். இதனால்தான் கன்னியாவில் பாரிய நெருக்கடி உருவாகியது. அங்குள்ள இந்து ஆலய நிலத்தில், விகாரை அமைக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. நீதிமன்றத்தால் அந்த முயற்சி தடுக்கப்பட்டாலும் அரசாணைப்படியும் அதிகாரபூர்வமற்ற முறையிலும் குடியேற்ற முயற்சிகள் வேறு இடங்களில் நடந்துகொண்டு தான் இருக்கின்றன.

ஆகஸ்ட் 30 காணாமல் ஆக்கப்பட்டவர்களின் தினம். போர் முடிந்து பத்தாண்டுகள் ஆகின்றன. வருடம் தோறும் இந்த தினத்தை நினைவு கொள்கிறோம். போராட்டங்கள் செய்கின்றோம். தலைவர்கள் அறிக்கைகளை விடுகின்றனர். எழுத்தாளர்கள் கட்டுரைகளை எழுதுகிறோம். கவிஞர் கவிதைகளை எழுதுகிறோம். இந்தப் பத்தாண்டுகளில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் விடயத்தில் என்ன முன்னேற்றம் நடந்தது? அந்த மக்கள் இன்றும் தெருவில் இருந்து போராடிக் கொண்டிருக்கிறார்கள். போராடிப் போராடியே செத்துக் கொண்டிருப்பதுதான் நடந்தது.

ஒன்று மாத்திரம் நன்றாகப் புலப்படுகின்றது. முள்ளிவாய்க்கால் இறுதிப் போரில் இராணுவத்தை நோக்கிச் சென்று சரணடைந்தவர்கள் மாத்திரம் காணாமல் ஆக்கப்படவில்லை. போர் முடிவுக்கு வந்த பின்னர், அருட்தந்தை பிரான்சிஸ் அடிகளாருடன் கையளிக்கப்பட்ட பல நூற்றுக் கணக்கான போராளிகள் மற்றும் அவர்களின் குடும்பங்கள் மாத்திரம் காணாமல் ஆக்கப்படவில்லை. காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்காக போராடிய உறவுகளும் காணாமல் ஆக்கப்படுகிறார்கள். மெல்ல மெல்ல அவர்களும் இந்த மண்ணுக்குள் காணாமல் தொலைக்கப்படுகிறார்கள்.

ரணிலும் மைத்திரியும் முரண்படுகின்றனர். ரணிலும் மகிந்தவும் முரண்படுகின்றனர். மைத்திரியும் கோத்தாவும் முரண்டுகின்றனர். ஆனால் இவர்கள் யாரும் காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பில் வாய் திறப்பதில்லை. சிங்கள இராணுவத்தின், சிங்கள அரசுகளின் இனப்படுகொலைக் குற்றங்களை பாதுகாப்பதில் மிக கச்சிதமாக, மிக ஒற்றுமையாக செயற்பட்டு வருகின்றனர். காணாமல் ஆக்கப்பட்டவர்களின் தாய்மார்கள், தந்தையர்கள் போராடுவது பற்றி அவர்களுக்கு எந்தக் கவலையும் இல்லை. துளியும் குற்றமில்லை.

அவர்கள் இதைத்தான் எண்ணுகின்றனர் போலும். காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்காக போராடுகின்ற தாய் — தந்தையர்களும் மெல்ல மெல்ல காணாமல் ஆகிப் போவார்கள். அப்போது கேள்வி எழுப்ப எரும் இருக்க மாட்டார்கள் என்று. இதே விடயத்தைத்தான் எல்லா இடத்திலும் சிங்கள அரசு பிரயோகிக்கிறது. நாம் நிலத்தின் அதிகாரத்தை கேட்கிறோம். அவர்கள் தொடர்ந்து நிலத்தை காணாமல் ஆக்கிக் கொண்டிருக்கிறார்கள். நாம் நமது கடலைக் கோருகிறோம். அவர்கள் கடலை காணாமல் ஆக்குகிறார்கள். நாம் நமது காட்டை கோருகிறோம் அவர்கள் காட்டை காணாமல் ஆக்குகிறார்கள். அவர்கள் எல்லாவற்றையும் காணாமல் ஆக்குவதைத்தான் தீர்வாகக் கொண்டுள்ளனர்.

இப்போது நாங்கள் ஆலயத்திற்கு பெரிதாக செல்வதில்லை. நல்ல தருணம். அவர்கள் ஆலயங்களை காணாமல் ஆக்கி புத்த விகாரைகளை கட்டுகிறார்கள். நாம் பண்பாட்டு உணர்வு உரிமையை மறந்துவிடுகிறோம். அவர்கள் அதனையும் காணாமல் ஆக்குகிறார்கள். எங்களை பக்கத்தில் வைத்திருந்தபடி, எங்களை துணையாக்கிக் கொண்டே எங்களை காணாமல் ஆக்கிக் கொண்டிருக்கிறார்கள்.

இன்றைக்கு ஒன்றுபட்ட இலங்கையைப் பேசிக் கொண்டு ஈழ விடுதலைப் போராட்டத்தை காணாமல் ஆக்கிக் கொண்டிருக்கிறார்கள். இதே நிலைமை தொடர்ந்தால், எதிர்வரும் காலத்தில் இந்த நாளில் ஒட்டுமொத்தமாக காணாமல் போனோர் என்றொரு இனமாக ஈழத் தமிழரையும் நினைவு கூர வேண்டிய நிலை வரும். இதே நிலை தொடர்ந்தால் ஈழம் என்றொரு காணாமல் போன நிலத்தையும் நினைவுகூர வேண்டி வரும். காணாமல் போன ஒரு தாயின் வலியை உணர்தலும் அதற்காய் இயங்குதலும்தான் இந்த நிலையை இல்லாமல் செய்யும் முதல் புள்ளியாய் இருக்கும்.

# ஐ.நா. மனித உரிமைத் தளத்தைப் புரிந்து கொள்ளவும் பயன்படுத்தவும் தவறி இருக்கின்றோம்

## ஐ.நா. மனித உரிமைப் பேரவையிலிருந்து மனித உரிமைச் செயற்பாட்டாளர் பொஸ்கோ



தமிழ் மக்களின் நீதிக்கான பயணத்திலே தமிழ் அரசியல் தலைமைகள் ஐ.நா உள்ளிட்ட பன்நாட்டு சமூகத்தை நோக்கி காத்திரமான அழுத்தங்களை கொடுக்கவில்லை. இதுவே தமிழ் மக்களின் நீதிக்கான போராட்டம் எதிர்பார்த்த இலக்குகளை அடையமுடியாமைக்கான முதன்மைக் காரணம் என்று ஐ.நா.மனித உரிமை பேரவையிலே அங்கீகரிக்கப்பட்ட அமைப்புக்களை முகாமை செய்து மனித உரிமை தளத்திலே அர்ப்பணிப்புடன் குரல்கொடுத்துவரும் மனித உரிமை செயற்பாட்டாளர் பொஸ்கோ அவர்கள் எமது இலக்கு மின்னிதழுக்கு வழங்கிய பேட்டியில் தெரிவித்துள்ளார். அவரின் பேட்டி வருமாறு.

**1. நீங்கள் எத்தனை ஆண்டுகளாக ஐ.நா மனித உரிமை தளத்திலே செயற்பட்டு வருகின்றீர்கள்? கடந்த பத்து ஆண்டுகளாக தாயகத்து உறவுகளோடு புலம்பெயர் அமைப்புக்களும் ஐ.நா.மனித உரிமை ஆணையத்தின் கூட்டங்களில் பங்கேற்ற போதிலும் இலங்கை மீது ஏன் ஒரு காத்திரமான பன்நாட்டு விசாரணையை கொண்டுவர முடியவில்லை சற்று விரிவாக கூற முடியுமா?**

நான் கடந்த 21 வருடங்களாக ஐக்கிய நாடுகள் சபை மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் ஆகிய சர்வதேச அமைப்புக்களுடன் இணைந்து மனித உரிமைச் செயற்பாட்டாளராக செயற்பட்டு வருகிறேன். நான் மாணவனாக இருந்தபோது தான் ஐ. நா. சபைக்கு செல்வதற்கான சந்தர்ப்பம் முதன் முதலில் எனக்கு கிடைத்தது. எனது பயிற்சியை நான் நிறைவு செய்ததன் பின்னர் எமது மக்களிற்காக எந்தவொரு அதிகாரப்பூர்வமான வேலைத்திட்டங்களும் ஐ.நா வின் செயற்திட்டத்திற்கு ஏதுவாக முன்னெடுக்கப் படவில்லை என்பதை உணர்ந்தேன். ஏனெனில் அங்கு தமிழ் மக்களின் பிரச்சினையை வெளிக்கொண்டுவரும் முகமாக எந்தவொரு ஐ.நாவின் அங்கீகாரம் பெற்ற (ECOSOC ) அமைப்புக்களும் உருவாக்கப்பட்டிருக்கவில்லை என்பதே உண்மை.

ஈழத்தமிழர்கள் ஐ.நா சபையிலும் சர்வதேச சமூகங்கள் மத்தியிலும் தமக்கான ஒரு உறுதியான ஒற்றுமைப்பாட்டினை அமைக்க தவறியிருந்தார்கள் என்பதே நிதர்சனமான உண்மை. கடந்த 14 வருடங்களுக்கு முன்னர் தான் நாம் ஐ.நா வில் (OHCHR ) அங்கீகாரம் பெற்ற அமைப்புக்களுடன் பணியாற்றும் முதல் அடியை எடுத்துவைத்தோம். ஐ.நா. மனித உரிமைகள் சபையினைக் (OHCHR ) கூட நாம் சரியாகப் பயன்படுத்தவில்லை. ஐ.நா சபையின் OHCHR விசேட பிரதி— நிதிகள் மற்றும் விசேட செயற்பாட்டுக் குழுக்களும் தமிழர்களுடைய சுயநிர்ணய உரிமை சார்ந்து பேசுவதையோ அல்லது தமிழினப் படுகொலை பற்றி பேசுவதையோ விரும்பவில்லை அதற்கான காரணம் நாம் ஐ.நா சபையின் செயற்திட்ட பொறிமுறைகளை சரியாக உள்வாங்கி செயற்படவில்லை என்பதே ஆகும்.

பெருமான்மையான தமிழ் சிவில் சமூகச் செயற்பாட்டாளர்கள் தமிழர்களுக்கு இழைக்கப்படும் அநீதிகள் தொடர்பாக ஐ.நா விற்கான மேன்முறையீடுகளை அனுப்புவதோடு நின்றுவிடுகிறார்களே தவிர அவர்கள் ஐ.நா செயற்திட்ட பொறிமுறைகளிற்குள் சரியான முறையில் செயற்படவில்லை என்பது மறுக்கப்பட முடியாத உண்மையாகும்.

ஐ.நா. மனித உரிமைகள் சபை இலங்கை தொடர்பான பிரச்சினையை தொடர்ந்தும் வெவ்வேறுவிதமான அமர்வுகளில் விவாதித்துக் கொண்டிருக்கின்றது. அதற்கான காரணம் அங்கு இடம்பெற்ற கொடூரமான மனித உரிமை மீறல்களே ஆகும். ஐ.நா வில் கொண்டு வரப்படும் தீர்மானங்கள் அனைத்தும் நாடுகளினால் முன்வைக்கப்பட்டு வாக்களிக்கப்படுகின்றன. இருந்தபோதும் இலங்கையைப் பொறுத்த வரையில் தமிழர்களுக்கு இழைக்கப்பட்ட இனவழிப்பை எந்தவொரு நாடும் ஏற்றுக்கொள்ள மறுக்கின்றன. ஆகவே



**தமிழ் தலைமைகள் ஐ.நா உள்ளிட்ட சர்வதேச சமூகத்தை நோக்கி காத்திரமான அழுத்தங்களை கொடுக்கவில்லை**

தமிழர்களாகிய நாம் எமக்கு இழைக்கப்பட்ட இனவழிப்பை ஏற்றுக்கொள்ளும் வகையில் சர்வதேச நாடுகளுடன் இணைந்து செயற்பட வேண்டும்.

**2. தாங்கள் அரசியல் மற்றும் சிவில் செயற்பாட்டாளர்களை ஒருங்கிணைத்து ஜெனீவாவை மையப்படுத்தி மனித உரிமை தளத்திலே தொடர்ந்து குரல் கொடுத்து வருகிறீர்கள். இவ்வாறான பணிகளை முன்னெடுக்கும்போது நீங்கள் எதிர் நோக்கும் தடைகள் என்ன?**

நாங்கள் ஜெனீவாவில் மட்டும் வேலைசெய்யாது ஜெனீவாவையும் பிரசெல்சையும் தளமாகக் கொண்டு தமிழர்களின் உரிமைசார்ந்த பிரச்சினைகளை ஐ.நா வின் நிகழ்ச்சி நிரலுக்குள் தக்க வைப்பதற்கான வேலைத்திட்டங்களை முன்னெடுத்து வருகின்றோம். அதேவேளை பாதிக்கப்பட்ட தரப்புக்கள், சாட்சியங்கள் மற்றும் செயற்பாட்டாளர்கள் ஆகியோரை ஒருங்கிணைத்து ஐ.நா மனித உரிமைகள் சபையின் பொறி முறைகளிற்குள் கொண்டு செல்கின்றோம். அரசு மற்றும் இராணுவத்தினரால் நாம் பலவழிகளிலும் பல்வேறுபட்ட பிரச்சினைகளுக்கு முகம்கொடுத்துவரும் நிலையில் தற்பொழுது நாம் எதிர்நோக்கும் பாரிய பிரச்சினை என்னவெனில் தாயகத்தில் தமிழ் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட தமிழ்ப் பிரதிநிதிகள் எங்களது விடயங்களில் தம்மை தேர்ந்தெடுத்த மக்களுக்கு நேர்மையாக இருக்காமல் இலங்கை அரசைப் பாதுகாப்பதும் தமிழினப் படுகொலை சம்மந்தமாகக் குரல்கொடுத்து பின்பு அதனைக் கைவிட்ட ஆங்கில நாடுகளில் செயற்படும் சில தமிழ் அமைப்புக்கள் மேற்கத்தைய நாடுகளின் கொள்கைகளைக் கடைப்பிடித்துக் கொண்டு தமிழர்களின் பிரச்சினை தொடர்பாக சில நாடுகளின் குறைந்தபட்ச கொள்கையை ஏற்றுக்கொண்டு அதற்கு ஆதரவு தெரிவித்துள்ளார்கள்.

இப்படி ஒரு சிலர் செய்வதனால் அந்த நாடுகள் தமிழர்களின் இறைமையை விட்டுக்கொடுக்காது செயற்படும் எம்மை நோக்கி அவர்கள் ஏற்றுக்கொள்ளும் விடயத்தை நீங்கள் ஏன் ஏற்றுக்கொள்ள மறுக்கிறீர்கள் எனக் கேட்கிறார்கள். அத்தகைய தமிழ் உரிமைச் செயற்பாட்டாளர்கள் தமிழ்நாட்டைத் தளமாகக் கொண்டு இயங்கும் ஐ.நா வில் ECOSOC அங்கீகாரம் பெற்ற ஒரு அமைப்பின் ஊடாகவே அனுமதிபெற்று உள்ளே வருகிறார்கள். இவ்வாறு வரும் இத்தரப்பினர் ஐ.நா வில் இடம்பெறும் நிகழ்வுகளை கண்டுகளிக்கும் பார்வையாளர்களாக இருப்பதுடன் அங்கு எடுக்கப்படும் முடிவுகளுக்கு கருத்துத் தெரிவிப்பவர்களாகவுமே இருக்கிறார்கள். அத்தோடு மட்டுமல்லாது அவர்கள் சிங்கள சிவில் அமைப்புக்களுடன் இணைந்து செயற்படுகின்றனர்.

ஆனால் பாதிக்கப்பட்ட தமிழ் தரப்பினருடனோ அல்லது தமிழ்ச் செயற் பாட்டாளர்களுடனோ இணைந்து செயற்பட தயாராகவில்லை என்பதோடு எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அவர்களின் கருத்துக்களை ஏற்றுக்கொள்ளத் தயாராகவும் இல்லை. அத்துடன் மேற்கத்தைய நாடுகளின் கொள்கைகளை உள்வாங்கி அவர்களின் முகவர்களாகச் செயற்பட்டும் வருகின்றனர். நாம் பாரியளவிலான நிதி நெருக்கடிகளுக்கு முகம்கொடுத்து வருகின்றோம் எனக்கு இன்னும் நினைவாக உள்ளது கடந்த வருடம் யூன் மாதம் நடைபெற்ற ஐ.நா மனித உரிமைகள் சபையின் கூட்டத்தொடரில் பங்கேற்ற தாயகத்தில் இருந்து வருகைதந்த வலிந்து காணாமலாக்கப்பட்ட உறவுகளைத் தேடி அலையுமொரு தாயார் கூறியது என்னவெனில்

நாம் கடந்த 500 நாட்களுக்கு மேலாக தொடர்ச்சியாக வீதியில் நின்று போராடிய போது கூடப் பட்டினி கிடைக்கவில்லை. ஆனால் ஜெனீவாவில் நாம் உணவின்றி பட்டினியோடு வேலைசெய்கிறோம். அந்த தாயார் சொன்னதை இப்போதும் என்னால் மறக்கமுடியாமல் உள்ளது.

**3. ஈழத்தில் இடம்பெற்ற இனவழிப்பு விவகாரத்தை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கு கொண்டு செல்வதற்கும் ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்பு பேரவைக்கு எடுத்துச் செல்வதற்கும் மனிதவுரிமை தளத்தில் நீண்ட காலமாக செயற்பட்டு கொண்டிருக்கும் நீங்கள் இன்று வரை என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறீர்கள்?**

நான் ஐ.நா வின் பொறிமுறைகள் மற்றும் செயற்திட்டங்கள் தொடர்பாக ஆறு வருடங்கள் கற்றுக்கொண்டேன். அதன் பின்னர் ஐ.நா வில் ECOSOC அங்கீகாரம் பெற்ற அரசசார்பற்ற அமைப்புக்களுடனான தொடர்பினை உருவாக்கிய பின்பு அதற்கூடாக கடந்த பதினாறு வருடங்கள் மேற்கொண்ட முயற்சிகளின் ஊடாக ஐ.நா வில் ECOSOS அங்கீகாரம் பெற்ற பல அரச சார்பற்ற அமைப்புக்களை உருவாக்கியுள்ளேன். இந்த அமைப்புக்களின் ஊடாக ஐ.நா மனித உரிமைகள் சபையின் ஒவ்வொரு கூட்டத்தொடரிலும் முழுமையான செயற்பாட்டுடன் கலந்துகொள்வதோடு தமிழர்களின் பிரச்சினையை ஐ.நா. மனித உரிமைகள் சபையின் நிகழ்ச்சி நிரலுக்குள் தொடர்ச்சியாக விவாதிக்கப்படும் வகையில் கொண்டுசெல்கின்றோம். இவ்வாறான செயற்பாடுகளை குறிப்பிட்ட ஒரு சிலருடன் இணைந்தே நான் முன்னெடுத்து வருகின்றேன்.

நாம் ஐ.நா. வின் பாதுகாப்பு சபையுடன் இணைந்து வேலை செய்வதற்கு ஏனைய உலக நாடுகளுடன் இணைந்து சரியான வகையில் வேலைத்திட்டங்களை முன்னெடுப்பதுடன் சர்வதேச மட்டத்தில் விழிப்புணர்வினை ஏற்படுத்தும் வகையில் பாரியளவிலான பிரச்சாரங்களை மேற்கொண்டு நெதர்லாந்து நாட்டில் அமைந்துள்ள சர்வதேச நீதிமன்றத்திற்கு கொண்டுசெல்ல வேண்டும். என்னைப் பொறுத்த வரையில் ஈழத் தமிழர்களுக்கான நீதியைப் பெறுவதற்கு எமது இயலளவில் பதினைந்து விகிதத்தினையே பயன்படுத்தி வருகின்றோம். இன்னும் 85 விகிதமான செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும். கடந்த 2018 யூன் மாதம் இடம்பெற்ற ஐ.நா மனித உரிமைகள் சபையின் 38வது கூட்டத்தொடரின் பின்பு தமிழினவழிப்பு தொடர்பாக கலந்துரையாடுவதற்கு 32 நாடுகளின் பாராளுமன்றங்களில் இருந்து எமக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்த போதிலும் பொருளாதார நெருக்கடி காரணமாக நாங்கள் அந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்தவில்லை என்பதை உதாரணமாகக் கூறலாம்.

ஐ.நா பொறிமுறை என்பது வெறுமனே ஜெனீவாவில் மட்டும் தங்கியிருக்கவில்லை இது நியூயோர்க் மற்றும் வியன்னா ஆகிய இடங்களிலும் செயற்படுகின்றது. அதே போன்றுதான் பிராந்திய அமைப்புக்களான பிரசெல்சில் உள்ள ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் அடிஸ் அபாபாவில் உள்ள ஆபிரிக்க ஒன்றியம் ஆகியவற்றுடன் இணைந்தும் நாம் செயற்திட்டங்களை முன்னெடுப்பதன் மூலம் எமது இலக்கினை அடைய முடியும். இந்த முக்கிய தந்திரோபாய இடங்களில் வேலை செய்வதற்கு எமக்கு அனுமதியும் தகுதியும் இருந்த போதிலும் துரதிஸ்டவசமாக எமக்குள்ள நிதி நெருக்கடி காரணமாக இவ்விடங்களுக்கு எம்மால் சமூகமளிக்க முடியவில்லை.

**4. ஒரு தேசிய இனம் அழிக்கப்படுவதை தடுப்பதற்கு ஐக்கிய நாடுகள் சபையில் இருக்கும் அதி உச்ச சட்டப் பாதுகாப்பு என்ன?**

ஐ.நா பாதுகாப்பு சபையின் இலக்குகளில் ஒன்றான பொதுமக்களின் பாதுகாப்பிற்கான கடப்பாடு ( The Responsibility to Protect - R2P ) எனும் சர்வதேச அரசியல் பொறுப்புக்கூறல் பொறிமுறையுடன் நான்கு பிரதான சர்வதேச சாசனங்களூடாக சிறுபான்மை இனங்களின் உரிமையை ஐ.நாசபை வலியுறுத்துகிறது. ஆனால் எந்தவொரு புலம்பெயர் தமிழ் அமைப்புக்களும் முள்ளி வாய்க்கால் தமிழினப் படுகொலை நடைபெற்றுக் கொண்டிருந்த காலப்பகுதியில் இந்த பொறி முறைகளில் ஈடுபடுவதற்கான எந்தவொரு செயற்பாட்டினையும் முன்னெடுக்கவில்லை. மாறாக வீதிகளில் ஆர்ப்பாட்டங்களை மட்டும் செய்து கொண்டிருந்தார்கள். வெறுமனே இந்த ஆர்ப்பாட்டங்கள் அல்லது வீதிகளில் செய்யப்படும் போராட்டங்களால் மட்டும் ஐ.நா பாதுகாப்பு சபையில் எவ்வித அழுத்தத்தையும் கொண்டுவர முடியாது என்பதே மறுக்கப்பட முடியாத உண்மையாகும்.

அச்சமயத்தில் நான் தனியாக நின்று மெக்சிகோ நாட்டின் பிரதிநிதி ஊடாக பாதுகாப்பு சபையில் எமது பிரச்சினையை தெரியப்படுத்தும் முகமாக சில செயற் திட்டங்களில் ஈடுபட்டிருந்தேன். எம்மவர்களின் ஒத்துழைப்பு இன்மையால் நான் எடுத்த முயற்சிகளை அடுத்தகட்டத்திற்கு நகர்த்திச் செல்லமுடியவில்லை. நான் மெக்சிக்கோ வெளியுறவு அமைச்சருடன் எமது நிலவரத்தை எடுத்துச் சொன்னதன் பின்பு அவர் ஒரு அறிக்கையைத் தயாரித்து மெக்சிகோ நாடு ஐ. நா பாதுகாப்பு சபையில் தலைமைத் துவம் வகித்த காலப்பகுதியில் சிறீலங்காவை ஐ.நா வின் நிகழ்ச்சி நிரலுக்குள் உள்வாங்க வேண்டுமென தனது உரையில் கோரியிருந்தமை குறிப்பிடத்தக்கது. அதற்கு அடுத்த வாரம் நூற்றுக்கு மேற்பட்ட சிறீலங்கா அரசின் பிரதிநிதிகள் மெக்சிக்கோவிற்கு வந்திருந்ததாக அவர்கள் எம்மிடம் தெரிவித்தார்கள். ஆனால் எம்மவர்கள் அவ்வாறான செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கு முன்வருகிறார்களில்லை.

தொடரும்...

## பிக்குகளால் தமிழர்களுக்கு மட்டுமல்ல எனக்கும் பெரிய தலையிடிதான் : கூட்டமைப்பிடம் குமுறினார் சனாதிபதி



பௌத்த பிக்குகளால் தமிழர்களுக்கு மட்டுமல்ல, எனக்கும் பெரிய தலை—யிடியாகத்தான் இருக்கிறது என கூட்டமைப்பினரிடம் மனந்திறந்தார் சனாதிபதி மைத்திரிபால சிறிசேன.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் சனாதிபதிக்கும் இடையிலான சந்திப்பு நேற்று மாலை சனாதிபதி செயலகத்தில் சுமார் 15 நிமிடங்கள் நடைபெற்றது. தொல்பொருள் திணைக்களம், வனஜீவ ராசிகள் திணைக்களம் என்பவற்றால் மக்கள் பாதிக்கப்படுவது, காணிகள் விடுவிக்கப்படாதது, பௌத்த பிக்குகளால் கன்னியா, நீரா வியடி உள்ளிட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்படும் அத்துமீறல்கள் குறித்து கூட்டமைப்பு தரப்பு விரிவாக குறிப்பிட்டது.

இதை கேட்டுக் கொண்டிருந்த மைத்திரி, “பௌத்த பிக்குகளால் தமிழர்களிற்கு மட்டு மல்ல, எனக்கும் பெரிய தலையிடியாகத்தான் இருக்கிறது. இங்கு பிரச்சினைகளை தந்து கொண்டிருக்கிறார்கள்“ என்றார்.

## ஐ.தே.க.வினரும் இளைஞர்களை கொலை செய்தவர்களே: மகிந்த கண்டுபிடிப்பு

கடந்த காலங்களில் இளைஞர்களை தேடித் தேடி கொலை செய்தவர்களுக்கும், சித்திரவதை செய்தவர்களுக்கு அன்று முறையான தண்டனை வழங்கியிருந்தால், இந்த அரசாங்கத்தைக் கொண்டு நடாத்த தலைவரும் அமைச்சர்களும் இருந்திருக்க மாட்டார்கள் என முன்னாள் சனாதிபதியும் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் தலைவருமான மகிந்த ராஜபக்ச தெரி—வித்தார்.

நேற்று (24) மாலை கொழும்பு தாமரைத் தடாக அரங்கில் இடம்பெற்ற பொதுஜன பெரமுனவின் இளைஞர் அணியின் மாநாட்டில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையில் இதனைக் கூறினார் பட்டலந்த சித்திரவதை முகாம் 1989 ஆம் ஆண்டுகளில் அம்பிலிப் பிட்டியவிலிருந்து பட்டலந்தை வரை பல இடங்களில் சித்திரவதை முகாம் இருந்ததை கேள்விப்பட்டிருப்பீர்கள்.

இந்தக் கால கட்டத்தில் தான் மனித உரிமைகள் என்ற வார்த்தையை முதன் முதலில் அறிமுகம் செய்தோம். சித்திரவதை பட்டவர்களும் அதற்கு எதிராக குரல் கொடுத்தவர்களும் இன்று ஓரணியில் திரண்டுள்ளனர் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

## கட்சியை முன்னிறுத்தி ‘எழுக தமிழ்’ நிகழ்வை முன்னெடுக்கவில்லை : விக்னேஸ்வரன்

‘எழுக தமிழ்’ நிகழ்வினூடாக ஓர் கட்சியின் எழுச்சி முன்னிறுத்தப்படுவதாக பலர் எண்ணுவது முற்றிலும் பிழையான விடயம் என தமிழ் மக்கள் கூட்டணியின் செயலாளர் நாயகம் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார். எழுக தமிழ் பேரணிக்கு சமூக அமைப்புக்களின் ஆதரவை திரட்டும் நடவடிக்கைகளின் ஓர் அங்கமாக (சனிக்கிழமை) மீனவ அமைப்புக்களுடனான கலந்துரையாடல் யாழில் நடைபெற்றது. குறித்த கலந்துரையாடலின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் தெரிவிக்கையில், “எழுக தமிழ் என்பது எந்தவொரு கட்சியையும் சார்ந்தது அல்ல. தமிழ் மக்களின் பிரச்சினைகளை உலகறியச் செய்ய வேண்டியதே எமது நோக்கமாகும். கட்சி பேதங்களை மறந்து தமிழ் மக்களுடைய பிரச்சினைகள் தொடர்பாக வருங்காலத்தில் நடவடிக்கை எடுக்க வேண்டியவர்களாக நாங்கள் இருக்கின்றோம். அடுத்த மாதம் ஜெனீவாவில் தமிழ் மக்களின் விடயங்கள் பேசப்படப் போகின்றன. அதேநேரத்தில் இலங்கையில் அடுத்தடுத்து மூன்று தேர்தல்கள் வரவிருக்கின்றன. இந்த நிலையில் எமது பிரச்சினைகளை உலகறிய தமிழ் மக்கள் ஒருமித்து நின்று கூறவேண்டிய தேவை உள்ளது.

நாம் தனிப்பட்ட கட்சி ரீதியான காரணங்களுக்காக இவ்வாறான தமிழ் மக்கள் பேரவையினுடைய எழுச்சி நிகழ்வை காட்டவிருப்பதாக சிலர் எண்ணுகின்றனர். ஆனால் அவ்வாறு நாம் செயற்படவில்லை என்பதுடன், தமிழ் மக்களின் வருங்கால சிந்தனையை உலகறியச் செய்வதே நோக்கமாகும்” என்று தெரிவித்தார்.

# சம்பந்தன் - சஜித் பேசியது என்ன? சனாதிபதி வேட்பாளராவது யார்?

கொழும்பு அரசியலை தொடர்ந்தும் கலக்கிக் கொண்டிருக்கும் விவகாரம் ஐ.தே.க. வின் சனாதிபதி வேட்பாளர் யார் என்பதுதான். இதில் ஒரு முக்கிய திருப்பமாக, "நான்தான் வேட்பாளர்" என அறிவித்துக்கொண்டிருக்கும் சஜித் பிரேமதாச தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர்களைச் சந்தித்தது கடந்த வாரம் அரசியலில் பரபரப்பை ஏற்படுத்தியிருந்தது. நள்ளிரவையும் தாண்டி அதிகாலை 1.00 மணி வரையில் நடைபெற்ற இந்தச் சந்திப்பு கள நிலையில் மாற்றத்தை ஏற்படுத்துமா என்பதுதான் இந்த வாரக் கேள்வி. அதற்குப் பதிலைத் தேடுவதற்கு முன்னதாக, இந்தச் சந்திப்பின் பின்னணி குறித்து பார்ப்போம்.

ஐ.தே.க. தலைமையிலான 'மெகா' கூட்டணியை அமைப்பது குறித்து ராஜிதவின் இல்லத்தில் நடைபெற்ற கட்சித் தலைவர்களின் ஆலோசனைக் கூட்டம் முடிவின்றி முடிந்தது குறித்து கடந்த வாரம் செய்தி வெளிவந்திருந்தது. யாப்பு குறித்து முழுமையான உடன்பாடு ஏற்படாததுதான் இதற்குக் காரணம். அதற்கு முன் முக்கியமான மற்றொரு சந்திப்பு இடம்பெற்றது. கட்சியில் தனக்கு ஆதரவானவர்களுடன் மட்டும் பேசிப் பலனில்லை என்பதால் தன்னை எதிர்ப்பவர்களுடனும் பேசிப் பார்ப்போம் என்ற முடிவில் காய் நகர்த்தியிருக்கிறார் சஜித். அதன் மூலம் கட்சியின் முழு ஆதரவையும் தனக்குச் சார்பாகக் கொண்டுவந்துவிட முடியும் என்பது அவரது எதிர்பார்ப்பு.

முதல் நகர்வாக ரணில் விக்கிரமசிங்கவின் தீவிர ஆதரவாளரான ராஜித சேனாரட்ணவையும், சம்பிக்க ரணவக்கவையும் சந்தித்துப் பேசியிருக்கிறார் சஜித். 'மெகா' கூட்டணியின் சக்திவாய்ந்த பதவியான செயலாளர் பதவிக்கு ராஜிதவையே நியமிப்பதற்குத்தான் ரணில் முயற்சிக்கிறார். அந்தளவுக்கு அவர் ரணிலுக்கு நம்பிக்கையானவர். ஆனால், அந்தப் பதவி தனக்குத் தரப்பட வேண்டும் என சஜித் போர்க்கொடி தூக்கியிருப்பது பழைய செய்தி. இந்தப் பின்னணியில் ராஜிதவுடனான சஜித்தின் சந்திப்பு சுவாரஸ்யமானது. சஜித்தின் அடுத்த நகர்வுக்கும் அதுதான் காரணமாக அமைந்தது என கொழும்பு அரசியல் வட்டாரங்கள் சொல்கின்றன.

இந்தச் சந்திப்பின்போது, தன்னையே சனாதிபதி வேட்பாளராக கட்சி தெரிவு செய்ய வேண்டும் என ராஜிதவிடம் வலியுறுத்தினார் சஜித். இதற்கு ராஜித மிகவும் நிதானமாகப் பதில் கொடுத்திருக்கின்றார். "உங்களுடைய தந்தை ரணசிங்க பிரேமதாச கடுமையாகப் போராடித்தான் சனாதிபதிப் பதவிக்கு வந்தவர். அப்படித்தான் நீங்களும் போராட வேண்டும். அத்துடன் உங்களுக்கு இன்னும் காலம் இருக்கின்றது. நீங்கள் இப்போது அவசரப்படத் தேவையில்லை" என அறிவுரை கூறிய ராஜித மற்றொரு விடயத்தையும் சொல்லியிருக்கின்றார்.

"சனாதிபதித் தேர்தலில் வெற்றிபெற ஐ.தே.க.வுக்கு சிறுபான்மைக் கட்சிகளின் ஆதரவு அவசியம். உங்களுக்கு அந்த ஆதரவு இல்லை. உங்களுடன் இருப்பவர்களில் மங்கள சமரவீர மட்டும்தான் சிறுபான்மையினருடைய பிரச்சினைக்கு தீர்வைக் கூறுகின்றார். மற்றவர்கள் அப்படியல்ல. நீங்களும் அவர்களுக்கான ஒரு தீர்வைக் கூறவில்லை. இதனால், சிறுபான்மையினக் கட்சிகளின் ஆதரவை உங்களால் பெறமுடியாது. அதனால், இந்தத் தேர்தலில் நீங்கள் வெற்றிபெற முடியாது" என சஜித்துக்கு நிலைமைகளை எடுத்துக்கூறிய ராஜித, "அதனால், இந்த முயற்சியிலிருந்து நீங்கள் ஒதுங்கிக்கொண்டு ரணிலுக்கு ஆதரவளியுங்கள்" என ஆலோசனையும் கூறியிருக்கின்றார்.



நிதானமாக அனைத்தையும் அவதானித்த சஜித், "சரிதான். நான் பார்க்கிறேன்" என அங்கிருந்து கிளம்பிவிட்டார். போனதுடன் சும்மா நிற்கவில்லை. உடனடியாகவே மங்கள

**பூமிகன்**

சமரவீரவைத் தொடர்பு கொண்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடனான பேச்சுக்கு ஏற்பாடு செய்தார் என உள்ளக வட்டாரங்கள் சொல்கின்றன. இது குறித்து அமைச்சர் மனோ கணேசனுடனும் மங்கள ஆலோசனை நடத்தியிருக்கின்றார். "நல்ல விஷயம். மனம் விட்டு பேசுங்கள்" என இதற்கு மனோ பதிலளித்திருக்கின்றார். ஐ.தே.க.வின் சார்பில் சஜித் களமிறங்குவதைத்தான் மனோவும் விரும்புவதாகத் தெரிகின்றது.

உடனடியாகவே சந்திப்புக்கான ஏற்பாடு மங்களவினால் செய்யப்பட்டது. சம்பந்தனை சந்தித்து "தமிழ் மக்களுடைய பிரச்சினைகளுக்கு ஆறு மாதத்தில் தீர்வு தருவேன்" என்றும் சொல்லிவிட்டார் சஜித். ஆனால், பிரச்சினை என்ன? தீர்வு என்ன? என்பதற்கான விளக்கத்தை அவரால் சொல்ல முடியவில்லை. மக்களின் இல்லத்தில் நடைபெற்ற இந்தச் சந்திப்பில் சஜித் வருவதற்கு முன்னர் மங்களதான் கூட்டமைப்பின் மூவர் குழுவுடன் விரிவாகப் பேசியிருக்கின்றார். சம்பந்தனுடன், மாவை சேனாதிராஜாவும், சுமந்திரனும் இந்தப் பேச்சக்களில் கலந்துகொண்டிருந்தார்கள்.

எதிர்த் தரப்பான பொதுஜன பெரமுனையின் சார்பில் களமிறங்கும் கோத்தபாய ராஜபக்சவுக்கு சிங்கள மக்கள் மத்தியில் அதிகளவு ஆதரவிருப்பதாகச் சுட்டிக்காட்டிய மங்கள, சஜித்தை களமிறக்கினால் மட்டும்தான் தம்மால் அதனை ஈடுகொடுக்கக்கூடியதாக இருக்கும் எனவும் குறிப்பிட்டிருக்கின்றார். நாடு முழுவதிலும் தாம் நடத்திய துல்லியமான ஆய்வுகளின் மூலமாக இந்தத் தகவல்கள் தம்மால் பெறப்பட்டிருப்பதாகவும் அவர் கூறியிருக்கிறார். ரணிலைக் களமிறக்கினால் தோல்வி தவிர்க்க முடியாதது என்பதால்தான், சஜித்தை களமிறக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டுக்குத்தான் வந்திருப்பதாகவும் மங்கள விளக்கிக் கூறியிருக்கின்றார். அதனால், கூட்டமைப்பும் சஜித்தை ஆதரிக்க முன்வர வேண்டும் என்பதையும் அவர் வலியுறுத்தியதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இரவு 10.00 மணியளவில் மங்களவின் இல்லத்துக்கு வந்த சஜித், அதிகாலை 1.00 மணி வரையில் கூட்டமைப்பின் மும்மூர்த்திகளுடனும் பேசியிருக்கின்றார்.

"தேர்தல் குறித்த அறிவிப்பு முதலில் வரட்டும், நீங்களும் உள்களுடைய வேட்பாளர் யார் என்பதை அறிவியுங்கள். உங்களிடமுள்ள தீர்வு என்ன என்பதையும் சொல்லுங்கள். நாங்களும் எங்கள் பாராளுமன்றக் குழுவையும், ஒருங்கிணைப்புக் குழுவையும் கூட்டி எங்கள் முடிவை அறிவிக்கின்றோம்" என்ற வகையில் சம்பந்தன் பதிலளித்து சந்திப்பை முடித்துக்கொண்டார்.

ஐ.தே.க. சஜித்தை களமிறக்கினால் கூட்டமைப்பு ஜே.வி.பி. வேட்பாளரை ஆதரிக்கும் என கூட்டமைப்பு உறுப்பினர் ஒருவர் சொல்லியிருக்கும் பின்னணியில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றிருப்பதும் கவனிக்கத்தக்கது.

2015 சனாதிபதித் தேர்தலிலும் இதேபோன்ற ஒரு பிரச்சினை உருவானது. ரணில் தான் களமிறங்க முற்பட்டபோது பொது வேட்பாளராக மைத்திரியை களமிறக்கினால்தான் மகிந்தவை தோற்கடிக்க முடியும் என சந்திரிகா முன்வந்தார். இதனை ரணில் திட்டவட்டமாக நிராகரித்தார். ரணிலை சமாளிக்க சம்பந்தனையே சந்திரிகா பயன்படுத்தினார். சம்பந்தனை வீடு தேடிச் சென்று சந்தித்த சந்திரிகா இது குறித்து பேசினார். அதனையடுத்தே ரணிலைச் சந்தித்த சம்பந்தன், "நீங்கள் தோல்வியடைந்து மீண்டும் ராஜபக்ச ஆட்சி வருவதற்கு வழிவகுக்கப்போகின்றீர்களா?" என கேட்டதையடுத்தே ரணில் ஒதுங்கிக்கொண்டார். இது பழைய செய்தி.

இப்போதும் அதேபாணியில் சம்பந்தனின் ஆதரவைப் பெற்று அதன் மூலமாக ரணிலை ஒதுங்கிகொள்ளச் செய்ய முடியும் என மங்கள முற்பட்டிருப்பதாகவே தெரிகின்றது. மங்களவைப் பொறுத்தவரையில், இது போன்ற நெருக்கடியன நேரங்களில் இராஜதந்திரமாக காய் நகர்த்துவதில் வல்லவர். 2015 ஆட்சி மாற்றத்திலும் அவரது பங்களிப்பு கணிசமானதாக இருந்தது. இப்போது சஜித்துக்கு ஆதரவாக அவர் களமிறங்கிய போதே ரணீலின் முகாம் ஆட்டங்காணத் தொடங்கியது. மாத்தறையில் சஜித்துக்கு ஆதரவான கூட்டத்தை வெள்ளிக்கிழமை வெற்றிகரமாக நடத்தியவரும் மங்களதான். அங்கு உரையாற்றிய அவர், "ரணிலின் ஆசீர்வாதத்துடன் சஜித்தான் சனாதிபதி வேட்பாளராக களமிறங்குவார்" என பெரும் ஆரவாரத்துக்கு மத்தியில் சொல்லியிருக்கின்றார். ஆனால், இந்தத் தருணம் வரையில் விட்டுக்கொடுப்பதற்கு ரணில் தயாராகவில்லை. அதன்மூலம் தனது அரசியல் எதிர்காலம் சூனியமாகிவிடும் என அவர் அஞ்சுகின்றார். இதனால், ஐ.தே.க. ஆதரவாளர்கள் குழம்பிப்போயுள்ளனர். அடுத்த வாரத்துக்குள் நெருக்கடி முடிவுக்கு வந்தாக வேண்டும். ஆனால், என்ன முடிவு என்பதுதான் யாருக்கும் தெரியவில்லை!

# அமேசான் காடுகளில் பற்றி எரியும் தீ

## தீயணைக்கும் பணியில் 8 லட்சம் பேர்

அமேசான் காடுகளில் பற்றி எரியும் தீயை அணைக்கும் பணியில் படைகளை அதிரடியாக களம் இறக்கி பிரேசில் நாட்டின் அதிபர் நடவடிக்கை எடுத்துள்ளார். தற்போதைய நிலவரப்படி தீயணைக்கும் பணியில் 8 லட்சத்திற்கும் அதிகமான வீரர்கள் ஈடுபட்டுள்ளனர். பூமிக்கு தேவையான சுவாச காற்றில் 20 சதவீதத்தை உற்பத்தி செய்து தந்து வந்தது, பிரேசிலில் உள்ள அமேசான் மழைக்காடுகள்தான். எனவேதான் இந்த காடுகள், பூமியின் நுரையீரல் என்று அழைக்கப்படுகின்றன. இந்த காடுகளில் முன் எப்போதும் இல்லாத வகையில் ஏராளமான இடங்களில் தீப்பற்றி எரிகின்றன. இது ஐரோப்பிய நாடுகளையெல்லாம் கவலையில் ஆழ்த்தி உள்ளது. மின்னல் காரணமாக காடுகள் தீப்பற்றி எரிவதாக சொல்லப்பட்டாலும், அங்கு வாழ்கிற மக்களின் கைவேலை இது எனவும் குற்றச்சாட்டு எழுந்துள்ளது. விவசாயம், சுரங்க பணிகளுக்கு தேவைப்படுகிற நிலத்தை குறி வைத்து காடுகள் தீயிட்டு அழிக்கப்படுவதாக சொல்லப்படுகிறது.

எனவே அமேசான் காடுகள் தீப்பற்றி எரியும் பிரச்சினையில் உலக நாடுகள் பலவும் பிரேசிலுக்கு எதிராக கருத்து தெரிவித்தும், அழுத்தம் தந்தும் வருகின்றன. தீயை அணைப்பதற்கு போதுமான நடவடிக்கை எடுக்காவிட்டால், பிரேசிலின் பொருளாதாரத்தில் கை வைப்போம் என அந்த நாடுகள் மிரட்டல் விடுத்துள்ளன. அமேசான் காடுகளில் பற்றி எரிகிற தீயை கட்டுக்குள் கொண்டு வருகிறவரையில் அந்த நாட்டுடன் செய்து கொண்டுள்ள வர்த்தக ஒப்பந்தத்தை



நடைமுறைப்படுத்தப்போவதில்லை என்று பிரான்சும், அயர்லாந்தும் அறிவித்துள்ளன. பிரேசிலில் இருந்து மாட்டிறைச்சி இறக்குமதி செய்வதை நிறுத்துவது பற்றி ஐரோப்பிய கூட்டமைப்பு பரிசீலிக்க வேண்டும் என்று பின்லாந்து குரல் கொடுத்துள்ளது. இப்படி சர்வதேச அளவில் நிர்ப்பந்தங்கள் பெருகி வருகிற நிலையில், அமேசான் மழைக்காடுகளில் தீயை அணைக்கும் பணியில் அந்த நாட்டின் பாதுகாப்பு படைகளை களம் இறக்கி அதிபர் ஜெயிர் போல்சொனரோ அதிரடி நடவடிக்கை எடுத்துள்ளார். இயற்கை வளங்கள் உள்ள பகுதிகள், பூர்வீக குடிமக்கள் வாழ்கிற இடங்கள், குடியிருப்பு பகுதிகளையொட்டிய காடுகள் ஆகிய இடங்களுக்கு படைகள் விரைகின்றன. இதையொட்டி நேற்று முன்தினம் அதிபர் ஜெயிர் போல்சொனரோ தொலைக்காட்சி மூலம் நாட்டு மக்களுக்கு உரை ஆற்றினார். அப்போது அவர், “உலகமெங்கும் காடுகளில் தீப்பற்றி எரிகிறது. சர்வதேச பொருளாதார தடைகளுக்கு ஒரு சாக்குபோக்காக செயல்பட முடியாது” என கூறினார்.

அமேசான் காடுகளில் தீயணைப்பு பணியில் பாதுகாப்பு படைகளை களம் இறக்கி உள்ளதை அவர் உறுதி செய்தார். இதுபற்றி அவர் குறிப்பிடுகையில், “ஒரு ராணுவ வீரராக நான் அமேசான் காடுகளை நேசிக்க கற்றுக்கொண்டிருக்கிறேன். அவற்றை நான் பாதுகாக்க விரும்புகிறேன்” என கூறினார். அமேசான் காடுகளில் பற்றி எரிகிற தீயை அணைக்கும் பணியில் பாதுகாப்பு படைகளை ஈடுபடுத்துவது தொடர்பாக அவர் அதிகாரப்பூர்வ உத்தரவு ஒன்றையும் பிறப்பித்தார். ஆனால் அந்த உத்தரவு தெளிவற்று இருப்பதாகவும் விமர்சிக்கப்படுகிறது. அதே நேரத்தில் பிராந்தியத்தில் உள்ள இயற்கை வளம் நிறைந்த பகுதிகள், பூர்வீக நிலங்கள் மற்றும் எல்லையையொட்டிய பகுதிகளுக்கு படைகள் அனுப்பி வைக்கப்படுவதாக அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், தீயணைப்பு பணிகளை ராணுவ மந்திரி பெர்னாண்டோ அஜேவிடோ டி சில்வா கண்காணிப்பார், படை வீரர்களை ஒதுக்கீடு செய்யும் பொறுப்பை அவர் கவனிப்பார் எனவும் கூறப்பட்டுள்ளது. அடுத்த மாதம் 24—ந்தேதி வரை ஒரு மாத காலத்துக்கு தீயணைப்பு பணியில் படையினர் ஈடுபடுவர் என அறிவிக்கப்பட்டுள்ளது.


## வடகொரியாவுடன் நல்ல உறவு இருக்கிறது : டிரம்ப்



வடகொரியாவுடன் உண்மையிலேயே நல்ல விதமான உறவு இருப்பதாக அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் கூறியுள்ளார். அணு ஆயுத ஒழிப்பு மற்றும் ஏவுகணை பரிசோதனை திட்டங்கள் தொடர்பாக வடகொரியாவுக்கும் அமெரிக்காவுக்கும் இடையே ஒப்பந்தம் எட்டப்படவில்லை. ஒப்பந்தம் எட்டப்படும் பட்சத்தில் வடகொரியா மீதான பொருளாதார தடைகள் தளர்த்தப்பட வாய்ப்புள்ளது. ஆனால் ஒப்பந்தம் தொடர்பான பேச்சுவார்த்தை இன்னும் தொடங்கப்படாத நிலையில், கொரிய தீபகற்பத்தில், அமெரிக்காவும் தென் கொரியாவும் கூட்டுப் பயிற்சியில் ஈடுபட்டுள்ளன.

இது வடகொரியாவுக்கு ஆத்திரத்தை ஏற்படுத்தியுள்ளதால் அவ்வப்போது ஏவுகணைச் சோதனைகளை நிகழ்த்தி அமெரிக்காவையும், தென் கொரியாவையும் எச்சரித்து வருகிறது. கடந்த மூன்று வாரங்களில் மட்டும் 7 முறை ஏவுகணைகளை ஏவி வடகொரியா சோதனை செய்துள்ளது. இது தொடர்பாக வெள்ளை மாளிகையில் செய்தியாளர்களிடம் பேசிய அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப், வடகொரியாவுடன் உண்மையிலேயே நல்ல உறவு இருப்பதாகக் கூறினார். வடகொரிய அதிபர் கிம் ஜோங் உன், தன்னுடன் நேருக்கு நேராக பேசுபவர் என்றும் டொனால்ட் டிரம்ப் தெரிவித்தார்.

## கடலுக்குள் இருந்து ஏவப்படும் ஏவுகணை சோதனை செய்தது ரஷ்யா



கடலுக்குள் இருந்து ஏவப்படும் ஏவுகணையை ரஷ்யா வெற்றிகரமாக செலுத்தி சோதனை செய்துள்ளது. வடக்கு ரஷ்யப் பகுதியில் உள்ள கடலில் இருந்து நீர்மூழ்கிக் கப்பல் மூலம் புலாவா என்று பெயரிடப்பட்ட ஏவுகணையை சோதனை செய்தனர். ஏவப்பட்ட அந்த ஏவுகணை காம்சட்கா தீபகற்பப் (Kamchatka peninsula) பகுதியில் இருந்த இலக்கை குறிதவறாமல் தாக்கியது.இந்த ரக ஏவுகணைகளை நடுத்தர அணு ஆயுதங்களை பொறுத்தமுடியும் என்பது குறிப்பிடத்தக்கது. 500 கிலோ மீட்டர் தூரம் வரை சென்று இலக்கை குறிதவறாமல் தாக்கி அழிக்கும் புலாவா ஏவுகணைக்கு பதிலடி கொடுக்கும் வகையில் அமெரிக்காவும் தனது மேம்படுத்தப்பட்ட டொமஹாக் ஏவுகணையை சோதனை செய்து பார்க்க உள்ளதாக தகவல்கள் வெளியாகி உள்ளன.


## அமெரிக்கா - சீனா இடையேயான வர்த்தப்போர் உக்கிரம் அடைகிறது

சீன இறக்குமதி பொருட்களுக்கு, இருவேறு வகைகளில், 45 விழுக்காடு வரையில், வரிகளை அதிகரித்து, அமெரிக்க அதிபர் டொனால்டு டிரம்ப் அறிவித்திருக்கிறார். அமெரிக்கா—சீனா இடையே, வர்த்தகப் போர் மூண்டுள்ளது. உலகளவில் பொருளாதார மந்தநிலை நிலவும் நிலையில், இருநாடுகளும், பேசித் தீர்க்க இயலாமல், வர்த்தகப் போரின் தாக்கத்தை அதிகரித்துக் கொண்டே இருக்கின்றன. ஏற்கனவே, சீன இறக்குமதி பொருட்களுக்கு, அமெரிக்க அதிபர் டிரம்ப் 25 விழுக்காடு வரையில் வரிகளை விதித்தார்.



இதற்கு பதிலடியாக சீனாவும், அமெரிக்க இறக்குமதி பொருட்களுக்கான வரிகளை உயர்த்தியது. அமெரிக்கா—சீனா இடையிலான சண்டையில், இந்தியாவும் தப்பவில்லை. 7 ஆயிரத்து 500 கோடி டாலர்கள் மதிப்பில், அமெரிக்காவிலிருந்து இறக்குமதி செய்யப்படும், 5 ஆயிரத்து 78 பொருட்களுக்கு, 5 முதல் 10 விழுக்காடு வரையில் வரிகளை உயர்த்தியிருப்பதாக நேற்று சீனா அறிவித்தது. இந்த வரி உயர்வு அறிவிப்பு வருகிற செப்டம்பர் ஒன்றாம் தேதி முதல் அமல்படுத்தப்படும் என சீனா அறிவித்திருக்கிறது. இதனால், மிகுந்த கோபத்தில் உள்ள அமெரிக்க அதிபர் டொனால்டு டிரம்ப், தனது நாட்டில் உள்ள சீன நிறுவனங்கள் தாராளமாக வெளியேறலாம் என டுவிட்டரில் பதிவிட்டார். மேலும், ஏற்கனவே, 25 ஆயிரம் கோடி டாலர்கள் மதிப்பிலான சீன பொருட்களுக்கு விதிக்கப்பட்ட 25 விழுக்காடு வரி, 30 விழுக்காடாக அதிகரிக்கப்படும் என்றும், இந்த வரி உயர்வு, வருகிற அக்டோபர் மாதம் ஒன்றாம் தேதி முதல் அமல்படுத்தப்படும் என்றும் டிரம்ப் கூறியிருக்கிறார். இதுதவிர, எஞ்சியுள்ள, 30 ஆயிரம் கோடி டாலர்கள் மதிப்பிலான சீன இறக்குமதி பொருட்களுக்கு விதிக்கப்பட்ட வரி, 10 விழுக்காட்டிலிருந்து, 15 விழுக்காடாக உயர்த்தப்படும் என்றும், இந்த வரி உயர்வு வருகிற செப்டம்பர் ஒன்றாம் தேதி முதல் அமலுக்கு வரும் என்றும் டிரம்ப் அறிவித்திருக்கிறார்.

# செல்ஃபி வீடியோ மூலம் ரத்த அழுத்தத்தைக் காணலாம்




ரத்த அழுத்தத்தைப் பற்றி மிக எளிதில் தெரிந்துகொள்ள வந்துவிட்டது ஒரு புதிய முறை. உங்கள் செல்பேசியில் இருக்கும் செல்ஃபி கேமரா மூலம் அதைத் துல்லியமாகக் கண்டறியும் வழியை கனடா மற்றும் சீனாவில் உள்ள ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

டொரண்டோ பல்கலைக்கழக உளவிய லாளர் காங் லீ என்பவரும் மற்றும் ஆராய்ச் சியாளர் பால் ஜெங் ஆகியோர் டிரான்ஸ் டெர்மல் ஆப்டிகல் இமேஜிங் (TOI - Transdermal Optical Imaging ) என்ற தொழில்நுட்பத்தை உருவாக்கியுள்ளனர். நமது முகத்தோலில் இருக்கும் ஒளி கசியும் தன்மையின் (translucent) மூலம் இது செயல் படுகின்றது. ஸ்மார்ட்போன்களில் இருக்கும் ஆப்டிகல் சென்சார்கள் நம் தோலின் கீழ் உள்ள ஹீமோகுளோபினிலிருந்து பிரதி பலிக்கும் சிவப்பு நிற ஒளியைப் படம் பிடிக்க முடியும். இது ரத்த ஓட்டத்தில் ஏற்படும் மாற்றங்களைக் காட்சிப்படுத்தி அளவிட்டு TOI — ஐ அனுமதிக்கின்றது. இந்தச் செயலியை சீனாவில் உள்ள நியூராலஜிக்ஸ் என்ற நிறுவனம் உருவாக்கியுள்ளது.

ஐபோன் கேமராவின் மூலம் 1,328 நபர்களின் இரண்டு நிமிட செல்ஃபி வீடியோக்களை ஆராய்ச்சியாளர்கள் ஆய்வு செய்தனர். மூன்று வகையான ரத்த அழுத்தத்தை சுமார் 95 சதவீத துல்லியத்துடன் அளவிட முடிந்தது. அதுமட்டும் இல்லாமல் முன்பே எடுக்கப்பட்ட வீடியோக்களையும் கூட இது துல்லியத்துடன் அளவிடும். இந்தச் செயலியின் மூலம் 30 விநாடி செல்ஃபி வீடியோவைப் பதிவு செய்யும் போது, இதயத் துடிப்பு மற்றும் மன அழுத்த அளவீடுகளை வழங்குகிறது. மிக விரைவில் இந்தச் செயலியை சீனாவில் வெளியிட நியூராலஜிக்ஸ் நிறுவனம் திட்டமிட்டுள்ளது.

இதயத் துடிப்பு மற்றும் மன அழுத்தம் தவிர்த்து ரத்தத்தில் குளுக்கோஸ் அளவு, ஹீமோகுளோபின் மற்றும் கொலஸ்ட்ரால் அளவு ஆகியவற்றையும் கண்டறிவதற்க்கான முயற்சியில் ஆராய்ச்சியாளர்கள் ஈடுபட்டுள்ளனர். மிகவும் பதற்றமான சூழலில் பணியாற்றுபவர் ரத்த அழுத்தம் அதிகமானால் அதைப் பரிசோதிக்க மருத்துவமனையோ அல்லது மருந்தகத்திற்கோ செல்ல வேண்டாம். இருக்கும் இடத்தில் இருந்து செல்போனில் ரத்த அழுத்தத்தை செல்ஃபி கேமரா மூலம் தெரிந்து கொள்ளலாம்.




# மனதைப் படிக்கும் கருவி



நீங்கள் ஒரு வார்த்தை கூட சொல்லத் தேவையில்லை, எழுத வேண்டியதை, பரிமாற வேண்டிய கருத்துகளை மனதில் நினைத்தாலே போதும். உங்களின் மனது நினைப்பதைத் துல்லியமாகக் கண்டறிந்து அதை தட்டச்சு செய்யும் ஒரு கருவியைக் கண்டுபிடிப்பது தான் ஃபேஸ்புக்கின் அடுத்த திட்டம்.

இந்தக் கருவி மட்டும் வந்துவிட்டால் நீங்கள் மணிக்கணக்காக ஸ்டேட்டஸ் போட வேண்டியதில்லை. ஃபேஸ்புக்கை லாக்—இன் செய்துவிட்டு இந்த உலகுக்கு நீங்கள் சொல்ல வேண்டியதை நினைத்தாலே போதும். அடுத்த நொடியில் அது பதிவாக உங்கள் முன் காட்சியளிக்கும். அதை ஒருமுறை படித்துவிட்டு போஸ்ட் செய்ய வேண்டியதுதான் உங்கள் வேலையாக இருக்கும். அத்துடன், பேச முடியாதவர்களுக்கு இது பேருதவியாக இருக்கும். இந்தக் கருவியைக் கண்டுபிடிப்பதற்காகவே ஃபேஸ்புக் சில கோடிகளை ஒதுக்கியுள்ளது. இப்போது சிலரிடம் பரிசோதனை முயற்சிகள் நடந்து வருகின்றன. அடுத்த வருடத்துக்குள் மனதைப் படித்து தட்டச்சு செய்யும் கருவி சந்தைக்கு வந்து பலரை உறங்கவிடாமல் செய்யலாம்.

# பூமிக்கு அடிக்கடி வரும் சிக்னல்.. அனுப்புவது யார்?



பல சமிக்ஞைகள் பிரபஞ்சம் வழியாக பூமிக்கு அனுப்பப் படுகின்றன என்று விஞ்ஞானிகள் கூறும் தகவல், ஏலியன்கள் குறித்த யூகங் களுக்கு புது பிள்ளையார் சுழி போட்டுள்ளது. பூமியை தவிர பிற கோள்கள் ஏதாவது ஒன்றிலும் மனிதர்களோ, ஏலியன்களோ வாழக்கூடும் என்ற யூகங்கள் பல காலமாகவே தொடர்ந்து கொண்டுள்ளது. இப்போது அந்த யூகங்களை உறுதி செய்யும் வகை—யிலான சில விஞ்ஞானப்பூர்வ ஆதாரங்கள் வெளியாக ஆரம்பித்துள்ளன. இப்போது வெளியாகியுள்ள சிக்னல் தொடர்பான, தகவலும் அதில் ஒன்றுதான்.

புதிய தரவுகள் கனடாவின், ஹைட்ரஜன் இன்டென்சிட்டி மேப்பிங் பரிசோதனை கூடத்—திலிருந்து கிடைத்துள்ளது. பிரபஞ்சம் ஆய்வு தொலைநோக்கிகள் மூலம் படம்பிடித்தபோது, 8 எனர்ஜி வெடிப்புகள் அல்லது வேகமான ரேடியோ வெடிப்புகள் (FRB) பூமியின் மேல் நிகழ்ந்ததை, ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்துள்ளனர். இந்த மர்மமான சிக்னல்களின் மூலம் எங்கேயுள்ளது என்பதை கண்டறிய ஆராய்ச்சியாளர்கள் முயற்சிக்கிறார்கள்.

இந்த கண்டுபிடிப்பு, பிரபஞ்சம் பற்றிய ஆய்வில், ஒரு பெரிய முன்னேற்றத்தை ஏற்படுத்தும் வாய்ப்பு உள்ளது. சிக்னல்கள் தேவை விஞ்ஞானிகள் முதல் FRBஐ 2007 இல் கண்டுபிடித்தனர், பின்னர் பல முறை இதுபோன்ற சிக்னல்களை கண்டறிந்துள்ளனர். 2 முறை ஆவணப்படுத்தியுள்ளனர். மீண்டும் மீண்டும் ரேடியோ வெடிப்பு சிக்னல்கள் வருவது முக்கியமானது.

ஏனென்றால் அவை எங்கிருந்து வரக்கூடும் என்பதைக் கணிப்பதற்கான வாய்ப்பை ஆராய்ச்சியாளர்களுக்கு அதிகரித்து வழங்குகின்றன. மேலும் அவற்றை விரிவாகப் ஆய்வு செய்யவும் வாய்ப்பு ஏற்படும். பால்வீதி ஆய்வு முடிவில் கிடைக்கும் தகவல் வியக்கத்தக்க வகையில் இருக்கலாம். பால்வீதியை தங்களுக்கு சொந்தமாகக் கொண்ட ஒரு நட்சத்திர மண்டலத்தில் இருந்துதான் இந்த சிக்னல்கள் வரக்கூடும் என்று ஆராய்ச்சியாளர்கள் கருதுகிறார்கள்.

இருப்பினும் இது குறித்து மேலும் அறிய கூடுதல் ஆய்வு செய்ய வேண்டியுள்ளதாம். பெரிய நிகழ்வு FRBகள் எங்கிருந்து வருகின்றன, அல்லது அவை என்னவாக இருக்கும் என்பது யாருக்கும் தெரியாது. அவற்றின் ஆழ்ந்த தீவிரம் அவை ஏதோ ஒரு தீவிர



நிகழ்வால் உருவாகி அனுப்பப்படுவதாக இருக்கலாம் என தெரிகிறது. ஒரு நட்சத்திரம் கருந்துளையில் விழுந்து ஏற்படும் சிக்னலாகவோ, அல்லது ஏலியன்களால் பிரபஞ்சம் வழியாக அனுப்பப்படும் செய்தியாகவோ இருக்கலாம். தொடர் ஆய்வு இந்த ரேடியோ சிக்னல்களின் மூலத்தை கண்டறிந்து புரிந்துகொள்ள, விஞ் ஞானிகள் இன்னும் அதிக சிக்னல்களை எதிர்பார்த்துக் கொண்டு உள்ளனர். மேலும் மேலும் அவை வரும்போது அவற்றை விரிவாகப் புரிந்து கொள்ளும் வாய்ப்பும் அதிகரிக்கும். எது எப்படியோ இந்த பிரபஞ்சம் மிகப்பெரிய மாயாஜாலம்தான்.